# தமிழ்நாடு அரசு

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண்.21

## நிதிநிலை செயலாக்கம்

## 2023-2024

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான செயல்பாடு

# I. நெடுஞ்சாலைத்துறை

## 1. முன்னுரை

வலிமையான சாலை உள்கட்டமைப்பு சிறந்த இணைப்பை உருவாக்குவதோடு, மாநிலத்தின் பொருளாதார மற்றும் ஒட்டு மொத்த வளர்ச்சிகளும் மேம்பட தூண்டுகிறது. நன்கு பராமரிக்கப்பட்ட, பாதுகாப்பான சாலைகள் வாகனங்களின் தேய்மானம், இயக்க செலவுகள் மற்றும் எரிபொருள் நுகர்வு ஆகியவற்றை குறைக்க வழி வகுக்கிறது. சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல், ஆறுகள், இருப்புப் பாதைகள் மற்றும் சாலைகளின் குறுக்கே பாலங்கள், நகரங்கள் மற்றும் ஊர்களுக்கு புறவழிச்சாலைகள், சுற்றுச் சாலைகள், சாலை மேம்பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகள் மாநில நெடுஞ்சாலைத்துறையால் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு பல்வேறு திட்டங்களின் மூலம் செயலாக்கப்படுகின்றன. சாலைகள் மற்றும் பாலங்களின் உள்கட்டமைப்புகள் திட்டம் சாராப் பணிகள் மூலம் பராமரிக்கப்படுகின்றன.

இத்துறையின் 2023–2024–ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு.

### 1.1. நெடுஞ்சாலைத்துறை மூலம் பராமரிக்கப்படும் சொத்துக்கள்

நெடுஞ்சாலைத்துறை 74021 கி.மீ. நீளச்சாலைகளைப் பராமரித்து வருகிறது. அவற்றில், 6805 கி.மீ சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. (மாநில நெடுஞ்சாலைகள் அலகினால் பராமரிக்கப்படும் 1677 கி.மீ சாலைகள் + இந்திய தேசிய நெஞ்சாலை ஆணையத்தினால் பராமரிக்கப்படும்

5128 கி.மீ சாலைகள்). சாலைகளின் வகைப்பாடு, பாலங்களின் வகைகள், சாலை மேற்தளப்பரப்பு வாரியாக நீள விவரங்கள் மற்றும் சாலை வழித்தடங்களின் நீள விவரங்கள் முறையே அட்டவணை 1 முதல் 4 வரை கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1 : சாலைகளின் வகைப்பாடு**

(நீளம் கி.மீ.–ல்)

| வ.எண் | சாலைகளின் வகைப்பாடு | | நீளம் |
|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் (தே.நெ) | மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின் பராமரிப்பின் கீழ் | 1677 |
| | | இந்திய தேசிய நெஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பின் கீழ் | 5128 |
| | | தேசிய நெடுஞ்சாலைகள் மொத்தம் | **6805** |
| 2 | மாநில நெடுஞ்சாலைகள் (மா.நெ) | | 12349 |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் (மா.மு.சா) | | 12034 |
| 4 | மாவட்ட இதர சாலைகள் (மா.இ.சா) | | 42833 |
| | சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ. தவிர) | | **67216** |
| | **ஒட்டு மொத்தம்** | | **74021** |

**அட்டவணை 2: பாலங்களின் வகைகள் மற்றும் அவற்றின் எண்ணிக்கைகள்**

| வ. எண் | பாலங்களின் வகைகள் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | குறு பாலங்கள் | 133949 |
| 2 | பெரிய பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள்* | 9183 |
| 3 | இருப்புப்பாதைக் கடவுகளுக்கு பதிலாக இரயில்வே மேம்பாலங்கள் | 150 |
| 4 | இருப்புப்பாதைக் கடவுகளுக்கு பதிலாக இரயில்வே கீழ்பாலங்கள் | 70 |
| 5 | பாதசாரிகள் சுரங்கப்பாதைகள் / வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதைகள் | 15 |
| 6 | சாலை மேம்பாலங்கள் | 76 |
| | **மொத்தம்** | **143443** |

*இதில் 6 மீட்டர் முதல் 60 மீட்டர் வரை நீர் வழிப்பாதை உள்ள சிறிய பாலங்கள் மற்றும் 60 மீட்டருக்கு மேல் நீர் வழிப்பாதை உள்ள பெரிய பாலங்கள் அடங்கும்.

## அட்டவணை 3 : சாலை மேற்தளப்பரப்பு வாரியாக நீள விவரங்கள்

(நீளம்கி.மீ.–ல்)

| வ. எண் | சாலைகளின் வகைப்பாடு | சிமெண்ட் கற்கலவைத் தளம் | தார்த் தளம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தேசிய நெடுஞ்சாலைகள் | 29 | 6776 | 6805 |
| 2 | மாநில நெடுஞ்சாலைகள் | 40 | 12309 | 12349 |
| 3 | மாவட்ட முக்கிய சாலைகள் | 32 | 12002 | 12034 |
| 4 | மாவட்ட இதர சாலைகள் | 110 | 42723 | 42833 |
| **மொத்தம்** | | **211** | **73810** | **74021** |

## அட்டவணை 4: சாலை வழித்தடங்கள் வாரியாக விவரங்கள்

(நீளம் கி.மீ.–ல்)

| வ. எண் | சாலைகளின் வகைப்பாடு | ஒரு வழித் தடம் | இடை வழித் தடம் | இரு வழித் தடம் | கடின புருவங்களுடன் கூடிய இரண்டு வழித் தடம் | நான்கு வழித் தடம் | ஆறு வழித் தடம் | எட்டுவழித் தடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **தேசிய நெடுஞ்சாலைகள்** | | | | | | | | |
| | மாநில தேசிய நெடுஞ்சாலைகள் | _ | _ | **331** | **899** | **447** | _ | _ | **1677** |
| | இந்திய தேசிய நெஞ்சாலை ஆணையத்தின்மூலம் | _ | _ | 951 | 1484 | 2288 | 384 | 21 | 5128 |
| | **மொத்தம்** | _ | _ | **1282** | **2383** | **2735** | **384** | **21** | **6805** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | _ | _ | 18.84% | 35.02% | 40.19% | 5.64% | 0.31% | |
| 2 | **மாநில நெடுஞ்சாலைகள்** | **37** | **315** | **6810** | **3124** | **1804** | **259** | **-** | **12349** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 0.30% | 2.55% | 55.15% | 25.30% | 14.61% | 2.10% | - | |
| 3 | **மாவட்ட முக்கியச் சாலைகள்** | **679** | **4880** | **5939** | **452** | **76** | **8** | _ | **12034** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 5.64% | 40.55% | 49.35% | 3.76% | 0.63% | 0.07% | - | |

| வ. எண் | சாலைகளின் வகைப்பாடு | ஒரு வழித் தடம் | இடை வழித் தடம் | இரு வழித் தடம் | கடின புருவங்களுடன் கூடிய இரண்டு வழித் தடம் | நான்கு வழித் தடம் | ஆறு வழித் தடம் | எட்டுவழித் தடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **4** | **மாவட்ட இதர சாலைகள்** | **33541** | **7606** | **1569** | **96** | **17** | **4** | **-** | **42833** |
| | வழித்தடத்தின் விழுக்காடு | 78.31% | 17.76% | 3.66% | 0.22% | 0.04% | 0.01% | - | |
| | **மொத்தம்** | **34257** | **12801** | **15600** | **6055** | **4632** | **655** | **21** | **74021** |
| | **சாலைகளின் மொத்த நீளத்தில் வழித்தடத்தின் விழுக்காடு** | **46.28%** | **17.29%** | **21.08%** | **8.18%** | **6.26%** | **0.88%** | **0.03%** | |

## 1.2. திட்டங்களின் செயல்பாடு

### 1.2.1. நிதிச் செயல்பாடு

2023-24 ஆம் ஆண்டிற்கான திட்டப் பணிகளின் நிதிநிலைச் செயலாக்கம், மற்றும் 2024-25 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு அட்டவணை 5-இல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5: நிதிநிலைச் செயலாக்கம்**

**(ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023-24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு** | | | |
| | **மாநில நெடுஞ்சாலைகள்** | | | |
| 1 | பாலங்கள் (மூலப் பணிகள்)-JA | 674.83 | 715.00 | 0.01 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 |
|---|---|---|---|---|
| 2 | சாலைகள் (நில எடுப்பு)–JA | 0.00 | 117.60 | 0.00 |
| 3 | 416 பெரும் பணிகள் -JF | 200.00 | 167.48 | 200.00 |
| | **மொத்தம்** | **874.83** | **1000.08** | **200.01** |
| | **மாவட்ட முக்கியச் சாலைகள்** | | | |
| 4 | 416 பெரும் பணிகள்–JG | 200.00 | 195.32 | 200.00 |
| | **மாவட்ட இதரச் சாலைகள்** | | | |
| 5 | 416 பெரும் பணிகள்–JH | 200.00 | 193.60 | 200.00 |
| | **பழுதடைந்தப் பாலங்களை மறுசீரமைத்தல்** | | | |
| 6 | பழுதடைந்தப் பாலங்களை மறுசீரமைத்தல் –JJ | 411.72 | 341.97 | 0.01 |
| 7 | 416 பெரும் பணிகள்–JB | 200.00 | 181.59 | 200.00 |
| | **மொத்தம்** | **611.72** | **523.56** | **200.01** |
| | ஒருங்கிணைந்த சாலை உ ள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) | | | |
| 8 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாநில நெடுஞ்சாலைகள்–JI | 315000.00 | 347484.49 | 415000.00 |
| 9 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாவட்ட முக்கியச் சாலைகள் –JT | 125000.00 | 162600.00 | 129800.00 |
| 10 | சி.ஆர்.ஐ.டி.பி. – மாவட்ட இதரச் சாலைகள் –JU | 160000.00 | 206078.97 | 179200.00 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 |
|---|---|---|---|---|
| 11 | சி.ஆர்.ஐ.டி.பி. – சிறப்புக் கூறுத் திட்டம் –JC | 15000.00 | 22986.17 | 15000.00 |
| | **மொத்தம்** | **615000.00** | **739149.63** | **739000.00** |
| **12** | சி.ஆர்.ஐ.டி.பி. சாலையின் ஓடுதளத்தினை மேம்படுத்துதல்–KF | 35000.00 | 46983.29 | 31000.00 |
| **13** | சி.ஆர்.ஐ.டி.பி. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்–JN | 85597.00 | 60643.70 | 59752.00 |
| 14 | புறவழிச் சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்துதல்– JK - நிலங்கள் | 6426.43 | 9568.56 | 5773.21 |
| 15 | புறவழிச் சாலைகளுக்கு நிலம் கையகப்படுத்துதல்– KC | | | |
| | (i) பணிகள் | 10404.27 | 8608.20 | 3475.04 |
| | (ii) நிலங்கள் | 6071.92 | 2098.34 | 1612.22 |
| | **மொத்தம்** | **16476.19** | **10706.54** | **5087.26** |
| 16 | கட்டடங்கள் கட்டுதல்–KT | 42.66 | 2.09 | 0.01 |
| 17 | மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) நெடுஞ்சாலைத்துறை அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டம்–KB | 0.01 | 255.13 | 0.00 |
| 18 | சாலை பாதுகாப்பிற்கானச் சிறப்புத்திட்டம்–KO | 5000.00 | 1759.01 | 415.20 |
| 19 | மாநகர சாலைப் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள் –JD | 20000.00 | 6047.18 | 25000.00 |
| 20 | உயர்செறிவு உடைய சாலை வழித்தடம் –JE | 34.75 | 0.00 | 0.02 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 |
|---|---|---|---|---|
| 21 | சேலம் சந்திப்பு–ஏற்காடு சாலையில் மேம்பாலம் கட்டுதல்–JF | 0.01 | 0.00 | 0.01 |
| 22 | தொழிற்சாலைகளுக்கு செல்லும் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்–KH | 3085.95 | 0.00 | 1557.57 |
| 23 | நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்–KI | 4500.00 | 1950.43 | 3703.79 |
| 24 | ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவியுடன் புதுவயல்–பழவேற்காடு சாலையை இடைவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல்–TNIPP-II, Phase-2–PB | 0.01 | 538.14 | 743.29 |
| 25 | சென்னை மாநகரில் உள்ள ஆரச்சாலைகளை மேம்படுத்துதல்–JP | 0.01 | 0.00 | 0.01 |
| 26 | மாவட்ட சாலைகள் மற்றும் பிறச் சாலைகள்–JC | 0.00 | 11.10 | 0.00 |
| | **க(ம)ப மொத்தம்** | **793049.57** | **879527.36** | **872832..39** |
| 27 | வளர்ந்து வரும் தொழிற்சாலைப் பகுதிகளில் உள்ள முக்கிய சாலைகளை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் மூலம் மேம்படுத்துதல்–JJ | | | |
| | அ)பணிகள் | 4312.85 | 0.00 | 0.01 |
| | ஆ)நிலங்கள் | 1.00 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **4313.85** | **0.00** | **0.02** |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 |
|---|---|---|---|---|
| 28 | தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் மூலம் மதுரை வட்டச் சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல்– –JM | | | |
| | அ) பணிகள் | 0.01 | 0.00 | 0.01 |
| | ஆ) நிலங்கள் | 2000.01 | 0.00 | 2000.00 |
| | **மொத்தம்** | **2000.02** | **0.00** | **2000.01** |
| | **தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்–மொத்தம்** | **6313.87** | **0.00** | **2000.03** |
| 29 | சென்னை வெளிவட்டச் சாலை–(கட்டம் 1)–JK | | | |
| | அ) பணிகள் | 12672.92 | 19911.84 | 14822.46 |
| | ஆ) நிலங்கள் | 0.01 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **12672.93** | **19911.84** | **14822.47** |
| 30 | சென்னை வெளிவட்டச் சாலை–(கட்டம் 2)–KI | | | |
| | அ) பணிகள் | 24326.65 | 28101.79 | 28566.32 |
| | ஆ) நிலங்கள் | 0.01 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **24326.66** | **28101.79** | **28566.33** |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023-24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|
| 31 | JICA நிதியுதவியுடன் TNIPP கட்டம்-2ல் இராஜீவ் காந்தி சாலையில் கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலைகள்-PA | 7103.01 | 7103.00 | 0.01 |
| 32 | சென்னை மாநகரில் உள்ள தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலை மேம்பாட்டுப்பணி -JX | | | |
| | அ) பணிகள் | 0.01 | 6625.00 | 40074.52 |
| | ஆ) நிலங்கள் | 0.00 | 12656.18 | 0.00 |
| | **மொத்தம்** | **0.01** | **19281.18** | **40074.52** |
| | **தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்- மொத்தம்** | **44102.61** | **74397.81** | **83463.33** |
| 33 | வடக்கு துறைமுகம் அணுகுச் சாலை மேம்பாட்டுத்திட்டம்-KN | | | |
| | அ) பணிகள் | 0.00 | 0.00 | 0.00 |
| | ஆ) நிலங்கள் | 0.01 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **0.01** | **0.00** | **0.01** |
| 34 | CPRR பிரிவு II மற்றும் III ற்கான நிலம் கையகப்படுத்துதல் - KL | 15057.50 | 11313.67 | 13000.00 |
| 35 | CPRR பிரிவு V ற்கான நிலம் கையகப்படுத்துதல்-KM | 17400.00 | 13148.50 | 22300.00 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 |
|---|---|---|---|---|
| 36 | ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையுடன் இணைந்து சென்னை வெளிவட்டச் சாலைத் திட்டம் பகுதி 1–ன் கீழ் சென்னை வெளிவட்டச் சாலை அமைக்கும் திட்டம் – PD | 70000.00 | 182.52 | 90000.00 |
| **37** | சர்வதேச அபிவிருத்தி உதவிக்கான AIIB மற்றும் OPEC நிதியத்துடன் CPRR பிரிவு II மற்றும் III ஐ உருவாக்குவதற்கான கருத்திட்டம் –PC | 82269.00 | 41729.00 | 101402.00 |
| | **சென்னை எல்லை சாலைத் திட்டம்– மொத்தம்** | **184726.51** | **66373.69** | **226702.01** |
| 38 | ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்–PB | | | |
| | அ)பணி | 150000.00 | 176649.98 | 90784.87 |
| | ஆ)நிலங்கள் | 0.01 | 0.00 | 0.01 |
| | **சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்– மொத்தம்** | **150000.01** | **176649.98** | **90784.88** |
| | **திட்டம் மொத்தம்** | **1178192.57** | **1196948.84** | **1275782.64** |
| | **நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு** | | | |
| 39 | நபார்டு நிதியுதவியுடன் பாலங்களை கட்டுதல் / சீரமைத்தல் –JZ | 60056.49 | 50137.87 | 75436.71 |
| 40 | தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் ஊரகச் சாலைகள் மேம்பாடு –JI | 0.01 | 7.28 | 0.01 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 |
|---|---|---|---|---|
| 41 | மாநில நிதியின் கீழ் பாலங்களைக் கட்டுதல் / சீரமைத்தல் -KJ | 469.85 | 417.61 | 2.70 |
| 42 | ஆசிய வளர்ச்சி வங்கி கடன் உதவியுடன் கூடிய சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின் கீழ் பாலங்கள் கட்டுதல் – நெடுஞ்சாலைகள்–RN | 1.05 | 1.05 | 1.05 |
| 43 | புறவழிச்சாலைப் பணிகள் –KA | 4760.74 | 1944.70 | 2680.79 |
| 44 | ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சிச் சாலைகள் மேம்படுத்துதல்–KD | 170779.00 | 182359.41 | 160000.00 |
| | **மொத்தம்** | **236067.14** | **234867.92** | **238121.26** |
| | **திட்டங்கள் அலகு** | | | |
| 45 | தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் கட்டுதல் –JJ | 18379.74 | 12259.63 | 21993.25 |
| 46 | போக்குவரத்து மேலாண்மைக்காக சென்னை பெருநகரப் பகுதிகளில் சாலை மேம்பாலங்கள் கட்டுதல் – JD | 0.02 | 0.00 | 0.01 |
| 47 | பாலங்கள் கட்டுதல்/ சீரமைத்தல் - JE | 3947.59 | 6497.27 | 534.03 |
| 48 | தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் பாலங்கள் கட்டுதல் / சீரமைத்தல் மற்றும் சாலைகள் மேம்படுத்துதல் – JQ | 81.22 | 0.00 | 0.64 |
| 49 | தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித் திட்ட சாலைப் பணிகள் – JN | 6781.54 | 6777.50 | 4997.75 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023-24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|
| 50 | இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ் பாலங்களைக் கட்டுதல் – JT | 32603.45 | 23800.72 | 22039.59 |
| 51 | இருப்புப் பாதை கடவுகளுக்கு பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுதல் –JG | 25566.27 | 9633.94 | 30104.37 |
| 52 | ஹட்கோ கடனுதவியுடன் பாலங்கள் கட்டுதல் (நில எடுப்பு தொகை) – JB | 0.00 | 166.71 | 31.93 |
| 53 | ஒருங்கிணைந்தச் சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP) – புறவழிச்சாலைகள் அமைத்தல் –JO | 7831.68 | 735.74 | 6779.67 |
| 54 | உயர்மட்டச் சாலை வழித்தடம் அமைத்தல் – JJ | 50000.00 | 49523.00 | 50065.25 |
| 55 | உள்வட்ட சாலை–JN | 0.00 | 20959.98 | 0.00 |
| | **மொத்தம்** | **145191.51** | **130354.49** | **136546.49** |
| | **பெருநகரம் அலகு** | | | |
| 56 | சென்னை மாநகரில் போக்குவரவு மற்றும் போக்குவரத்து மேம்படுத்துதல் – JW | 18746.55 | 36730.63 | 25530.59 |
| 57 | மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்து தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) செயல்படுத்தும் பணிகள் – KJ | 1407.74 | 256.54 | 126.47 |
| 58 | சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் – சென்னை மாநகரில் போக்குவரவு மற்றும் போக்குவரத்து மேம்படுத்துதல் – JH | 350.02 | 227.34 | 1108.66 |
| 59 | சென்னை மாநகர போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான திட்டத்தின் கீழ் பாலங்கள் மற்றும் சாலைகள் அமைத்தல் –JI | 29636.35 | 3313.98 | 13282.30 |

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 |
|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **50140.66** | **40528.49** | **40048.02** |
| | **தேசிய நெடுஞ்சாலைகள்** | | | |
| 60 | சென்னை துறைமுகத்தில் இருந்து மதுரவாயல் வரை உயர்மட்டச் சாலை அமைத்தல் | 0.00 | 3634.20 | 3634.20 |
| 61 | மூலப் பணிகள்–நிலங்கள் | 0.02 | 603.89 | 0.02 |
| 62 | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி – SA | 25000.00 | 2151.00 | 20800.00 |
| 63 | பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் (பராமரிப்பிற்காக ஒதுக்கப்படும் மாநில அரசின் நிதி) – JS | 0.01 | 0.00 | 0.01 |
| | **மொத்தம்** | **25000.03** | **6389.09** | **24434.23** |
| | **தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II** | | | |
| 64 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்– (கட்டம் II)–PC | 64500.00 | 53287.96 | 27592.01 |
| 65 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்– கட்டம் I –PB | 0.00 | 78.07 | 0.00 |
| 66 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்– கட்டம் I–PB | 0.00 | 33.21 | 0.00 |
| | **மொத்தம்** | **64500.00** | **53399.24** | **27592.01** |
| | **திட்டப் பணிகள் மொத்தம்** | **1699091.91** | **1662488.07** | **1742524.65** |

## 1.2.2. திட்டப்பணிகளின் செயல்பாடு

2023–24ஆம் ஆண்டில் செயலாக்கப்பட்டத் திட்டப்பணிகளின் விவரம் மற்றும் 2024–2025ஆம் ஆண்டிற்கான இலக்குகள் அட்டவணை 6–இல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6: திட்டப் பணிகளின் செயல்பாடு**

(பாலங்கள் / சிறு பாலங்கள் எண்ணிக்கையில், நீளம் கி.மீ.–ல்)

| வ. எண் | திட்டத்தின்பெயர் | சாதனைகள் (2023–24) | | இலக்குகள் (2024–25) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) |
| | **கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு** | | | | |
| 1 | ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | | | | |
| | மாநில நெடுஞ்சாலைகள் | 61 | 723 | 58 | 625 |
| | மாவட்ட முக்கியச் சாலைகள் | 82 | 934 | 88 | 650 |
| | மாவட்ட இதரச் சாலைகள் | 354 | 1516 | 380 | 1200 |
| | மாவட்ட இதரச் சாலைகள் (சிறப்புக் கூறுத் திட்டம்) | 1 | 289 | 9 | 250 |
| | **மொத்தம்** | **498** | **3462** | **535** | **2725** |
| | சாலையின் ஓடுதளத்தினை மேம்படுத்துதல் | – | 1700 | – | 2000 |
| | **சாலைகள் மற்றும் பாலங்கள்** | **498** | **5162** | **535** | **4725** |
| | **நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு** | | | | |
| 2 | நபார்டு நிதியுதவியுடன் பாலங்களைக் கட்டுதல் / சீரமைத்தல் (JZ **கணக்குத் தலைப்பு)** | 128 | --- | 80 | --- |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | சாதனைகள் (2023–24) | | இலக்குகள் (2024–25) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) |
| 3 | மாநில நிதியின் கீழ் பாலங்களைக் கட்டுதல் / சீரமைத்தல் –KJ | 1 | --- | 1 | --- |
| 4 | ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சி சாலைகள் மேம்படுத்துதல்–KD | --- | 1735 | --- | 1168 |
| 5 | இரயில்வே திட்டப் பணிகள் | 3 | --- | 3 | --- |
| | **மொத்தம்** | **132** | **1735** | **84** | **1168** |
| | **திட்டங்கள் அலகு** | | | | |
| 6 | தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்களும் சுரங்கப்பாதைகளும் கட்டுதல் - JJ | 3 | --- | 7 | --- |
| 7 | இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ்பாலங்களைக் கட்டுதல் – JT | --- | --- | 4 | --- |
| 8 | பாலங்கள் கட்டுதல்/ சீரமைத்தல் – JE | 3 | --- | 1 | --- |
| 9 | இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டுதல் –JG | 3 | --- | 2 | --- |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | சாதனைகள் (2023–24) | | இலக்குகள் (2024–25) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) |
| 10 | சாலைப் பணிகள் – JN | --- | --- | --- | 1.20 |
| 11 | உயர்மட்டச் சாலைகள் அமைத்தல் மற்றும் திரும்பக் கட்டுதல் – JJ(N) | --- | --- | 1 | --- |
| 12 | ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | | | | |
| | அ) மாநில நெடுஞ்சாலைகள் (JI-CRIDP) | 2 | 8.40 | 4 | 10.31 |
| | ஆ) மாவட்ட முக்கியச் சாலைகள் (JT-CRIDP) | 4 | --- | 2 | --- |
| | இ) இதர மாவட்டச் சாலைகள் (JU-CRIDP) | 9 | --- | 3 | --- |
| | **மொத்தம்** | **24** | **8.40** | **24** | **11.51** |
| 12 | **பெருநகரம் அலகு** | | | | |
| | அ) இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் | 1 * | --- | 3 | --- |
| | ஆ) சாலை மேம்பாலங்கள் | --- | --- | 1 | --- |
| | இ) ஆற்றுப் பாலங்கள் | 1 | --- | 1 | --- |

| வ. எண் | திட்டத்தின்பெயர் | சாதனைகள் (2023–24) | | இலக்குகள் (2024–25) | |
|---|---|---|---|---|---|
| | | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) | பாலங்கள்/ சிறு பாலங்கள் | சாலைகள் நீளம் (கி.மீ) |
| | ஈ) நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலங்கள் | 1 | --- | 2 | --- |
| | உ) சாலைகள் | --- | --- | --- | 11.315 |
| | **மொத்தம்** | **3** | **---** | **7** | **11.315** |
| * கடவு எண்.32 – பெருங்களத்தூர் இரயில்வே மேம்பாலப்பணியில், சீனிவாசராகவன் தெரு பாலப்பகுதி | | | | | |
| | **தேசிய நெடுஞ்சாலைகள் அலகு** | | | | |
| 13 | புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் | --- | --- | --- | 25.41 |
| | **மொத்தம்** | **---** | **---** | **---** | **25.41** |
| | **சென்னை – கன்னியாகுமரி தொழில் தடத் திட்டம்** | | | | |
| 14 | சென்னை – கன்னியாகுமரி தொழில் தடத் திட்டம் | 400 | 220 | 259 | 89 |
| | **மொத்தம்** | **400** | **220** | **259** | **89** |

## 1.3. பராமரிப்பு / புதுப்பித்தல் பணிகளின் செயல்பாடு

சாலைகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பிற்காக ரூ.807.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4853.00 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

### 1.3.1. நிதிச் செயல்பாடு

இத்திட்டத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் 2023–24 ஆம் ஆண்டில் பராமரிப்பு / புதுப்பித்தல் பணிகளுக்குச் செலவிடப்பட்ட விவரம் மற்றும் 2024–25 ஆம்

ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் அட்டவணை 7–இல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை7: திட்டம் சாராப்பணிகள்– நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்**

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 | செலவினம் (31.03.2024 வரை) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2024–25 |
|---|---|---|---|---|
| 1 | நகர்ப்புறத் தேசிய நெடுஞ்சாலைகள் | 296.04 | 290.65 | 310.84 |
| 2 | சென்னை மாநகரத்திலுள்ள முக்கியச்சாலைகளின் பராமரிப்பு | 2625.00 | 2797.07 | 2940.00 |
| 3 | மாநில நெடுஞ்சாலைகள் | 14827.63 | 16070.12 | 16932.79 |
| 4 | மாவட்ட முக்கியச் சாலைகள் | 13326.09 | 13342.72 | 14096.18 |
| 5 | மாவட்ட இதரச் சாலைகள் | 47465.43 | 47440.63 | 50449.70 |
| 6 | கரும்புச் சாலைகள் | 2100.00 | 2058.53 | 2205.00 |
| 7 | நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைச் சாலைகளை மேம்படுத்துதல் | 100.00 | 100.00 | 105.00 |
| **மொத்தம்** | | **80740.19** | **82099.72** | **87039.51** |

## 1.3.2. பணிகளின் செயல்பாடு

2023–24 ஆம் ஆண்டில் பராமரிப்பு / புதுப்பித்தல் பணிகளின் மேற்கொள்ளப்பட்டச் சாலைகளின் நீளம் மற்றும் 2024–25 ஆம் ஆண்டிற்கான இலக்கு ஆகியவை அட்டவணை 8–இல் விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 8: பராமரிப்பு / புதுப்பித்தல் பணிகள் – செயல்பாடுகள்**

(நீளம் கி.மீ.–ல்)

| வ.எண் | அலகின் பெயர் | சாதனைகள் 2023–24 | இலக்குகள் 2024–25 |
|---|---|---|---|
| 1 | கட்டுமானம் மற்றும் பராமரிப்பு | 4853 | 5100 |

# 2. முக்கிய திட்டங்களின் மொத்தச் செயல்பாடு

நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகிற்கு 2023–24 ஆம் ஆண்டிற்கு ரூ.16990.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் ரூ.16624.88 கோடி 31.03.2024 வரை திட்டப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

## 2.1. மாநில நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.1.1. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் (CRIDP)

ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமானது சாலை உள்கட்டமைப்புத் திறனை மேம்படுத்த உதவும் ஒரு முக்கியத் திட்டமாகும். சாலையினை மேம்படுத்துதல் வாகனத் தேய்மானத்தைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், சாலைப் பயனாளர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் வசதியான வாகன ஓட்டும் அனுபவத்தை அளிக்கிறது. பெருகி வரும் போக்குவரத்துச் செறிவிற்கு ஏற்ப சாலைகளை அகலப்படுத்தி, உறுதிப்படுத்துவதன் மூலம் சாலைகளின் ஆயுள்காலம் மற்றும் அதன் பயன்பாடு அதிகரிக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில், ரூ.14,980.65 கோடி மதிப்பில் 7966.11 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல், 1841 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டுதல் மற்றும் ரூ.1678.07 கோடி மதிப்பில் 5715.62 கி.மீ. நீளமுள்ள ஓடுதளப் பாதையினை மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.1. முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத்திட்டம்

இத்திட்டமானது 2021-22 பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது, இது **அடுத்த 10 ஆண்டுகளில் 2200 கி.மீ இருவழித்தடச் சாலைகளை நான்கு வழித்தடச் சாலைகளாகவும், 6700 கி.மீ. ஒரு வழி மற்றும் இடைவழித்தடச் சாலைகளை இருவழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது**. போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு முன்னுரிமைப்படுத்தப் படுகிறது.

மொத்தத்தில், இந்த முதன்மைத் திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில், ரூ.4984.22 கோடி மதிப்பில், 576.94 கி.மீ. நீளமுள்ள சாலைகள் நான்கு வழித்தடச் சாலைகளாகவும் ரூ. 2464.82 கோடி மதிப்பில், 1709.98 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இரு வழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் 215.47 கி.மீ. நீளமுள்ள சாலைகள் நான்கு வழித்தடச் சாலைகளாகவும் மற்றும் 1406.74 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இரு வழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1.1.2. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் –மாநில நெடுஞ்சாலைகள்

2023-24 ஆம் ஆண்டில், ரூ.2671.48 கோடி மதிப்பில், 547.12 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் 8 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாநில நெடுஞ்சாலைகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட சில முக்கிய பணிகளின் விவரம் பின்வருமாறு :

1. திருப்பூர் மாவட்டத்தில், பல்லடம் – தாராபுரம் சாலையில் (மா.நெ.174A) கி.மீ 24/8-29/4-ல் ரூ.43.08 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலையிலிருந்து நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்துதல் மற்றும் மேம்பாடு செய்தல்.

2. கோயம்புத்தூர் மாவட்டத்தில், அவினாசி – திருப்பூர் – பல்லடம் – பொள்ளாச்சி – கொச்சின் (வழி) மீன்கரை சாலையில் கி.மீ 92/750–98/2 வரை, ரூ.42.00 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலையிலிருந்து நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

3. புதுக்கோட்டை மாவட்டத்தில், திருச்சி – புதுக்கோட்டை – அறந்தாங்கி – மீமிசல் சாலையில் (மா.நெ.26) கி.மீ 52/0–52/4 & 52/6–57/0–ல் ரூ.44.00 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலையிலிருந்து நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

4. கரூர் மாவட்டத்தில், ஈரோடு – கரூர் சாலையில் (மா.நெ.84) கி.மீ 46/8–47/2 மற்றும் 53/0–54/2–ஐ ரூ.10.50 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலையிலிருந்து நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்.

5. மதுரை மாவட்டத்தில், மதுரை – தூத்துக்குடி சாலையில் (மா.நெ.32) கி.மீ 7/6 – 8/8 வரை ரூ.12.00 கோடி மதிப்பில் பலவழித்தடச் சாலையிலிருந்து கடின புருவத்துடன் கூடிய நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

கூடுதலாக, நிலுவைப்பணிகளான ரூ.4610.17 கோடி மதிப்பிலான 720.62 கி.மீ. நீளமுள்ளச் சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 61 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2023–24 ஆம் ஆண்டில் ரூ.3311.63 கோடி மதிப்பில் 723.49 கி.மீ. நீளமுள்ளச் சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும், 61 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

## 2.1.1.3. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட முக்கியச் சாலைகள்

2023–24 ஆம் ஆண்டில், ரூ.990.12 கோடி மதிப்பில், 546.15 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் 34 பாலங்கள்/சிறுபாலங்கள் கட்டுதல் ஆகியப் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளன.

மாவட்ட முக்கியச் சாலைகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட சில முக்கியப் பணிகள் பின்வருமாறு;

1. செங்கல்பட்டு மாவட்டத்தில், முதுகரை – கடலூர் சாலையில் கி.மீ 7/8–9/6 மற்றும் 14/0–15/4–ல் ரூ.6.90 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலையை, கடின தளப் புருவங்களுடன் கூடிய இரு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

2. வேலூர் மாவட்டத்தில், காந்தி நகர் பிரதான சாலையில் கி.மீ 0/0–1/9–ல் ரூ.6.62 கோடி மதிப்பில், கடினப் புருவத்துடன் கூடிய இருவழித்தடச் சாலையை நான்கு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

3. திருப்பத்தூர் மாவட்டத்தில், நாயனச்செருவு – ஆந்திர பிரதேச எல்லைச் சாலையில் ரூ.5.50 கோடி மதிப்பில், கி.மீ 5/2–6/8 மற்றும் 7/0–10/2–ல் இடை வழித்தடச் சாலையிலிருந்து இரு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிகள்.

4. விழுப்புரம் மாவட்டத்தில், சுணாம்பேட்டை சாலையில் ரூ.2.50 கோடி மதிப்பில், கி.மீ 0/0 – 3/0 வரை ரூ.2.50 கோடி மதிப்பில் உறுதிப்படுத்துதல்.

5. பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.3.40 கோடி மதிப்பில் செந்துறை – அங்கனூர் – அகரம் – சீகரம் – திருமாந்துறை சாலையில் கி.மீ 34/0 –36/0–இல்

இடை வழித்தடச் சாலையிலிருந்து இரு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

மேலும், நிலுவைப்பணிகளான, ரூ.1550.00 கோடி மதிப்பிலான 705.44 கி.மீ. நீளமுள்ளச் சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 73 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2023–24 ஆம் ஆண்டில், ரூ.1577.34 கோடி மதிப்பில், 934.49 கி.மீ. நீளமுள்ளச் சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகளும் மற்றும் 82 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.4. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட இதர சாலைகள்

2023–24 ஆம் ஆண்டில், ரூ.1433.88 கோடி மதிப்பில், 849.02 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், 168 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாவட்ட இதர சாலைகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட முக்கியப் பணிகள் பின்வருமாறு;

1. காஞ்சிபுரம் மாவட்டம், அரசணிமங்கலம் சாலையில் கி.மீ 2/0 – 3/4–ல் ரூ.6.85 கோடி மதிப்பில் ஒரு வழித்தடச் சாலையிலிருந்து இடை வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

2. இராணிப்பேட்டை மாவட்டம், பெருவாலயம் –கர்ணாவூர்–மகேந்திரவாடி சாலையில் கி.மீ 0/0 – 4/0 இல் ரூ.5.25 கோடி மதிப்பில் ஒரு வழித்தடச் சாலையிலிருந்து இடை வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

3. அரியலூர் மாவட்டத்தில், உஞ்சினி – வாரியங்காவல் சாலையில் கி.மீ 9/0 – 12/6–ல் ரூ.6.97 கோடி மதிப்பில் ஒரு வழித்தடச் சாலையிலிருந்து இடை வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

4. நாமக்கல் மாவட்டத்தில், மொளசி சாலையில் கி.மீ 0/0–2/8–ல் ரூ.4.66 கோடி மதிப்பில் இடை வழித்தடச் சாலையிலிருந்து இரு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

5. ஈரோடு மாவட்டத்தில், ரூ.6.50 கோடி மதிப்பில் பாளையம் – சோதன்புரம் சாலையில் கி.மீ 0/0–3/6, 5/0–6/0–ல் ஒரு வழித்தடச் சாலையிலிருந்து இடை வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

6. **ஜல்லிக்கட்டு அரங்கம் செல்லும் சாலை:** புகழ்பெற்ற வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஜல்லிக்கட்டு, மாநிலத்தின் காலங்காலமாக பின்பற்றப்பட்டு வரும் பாரம்பரிய விளையாட்டாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், அலங்காநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் கூடிய புதிய ஜல்லிக்கட்டு அரங்கம் கட்டப்படும் என்றும், விளையாட்டு அரங்கத்தின் அருகில் கண்காட்சி மையம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அவர்களால் 18.9.2022 அன்று ரூ.21.70 கோடி மதிப்பில் வாடிப்பட்டி – தாமரைப்பட்டி சாலை முதல் உலகத்தரம் வாய்ந்த இந்த வளாகம் வரை கடினப் புருவங்களுடன் கூடிய இரு வழித்தடச் சாலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் படி, குட்டிமிகிப்பட்டி – அதகரைப்பாலம் சாலை (மாவட்ட இதரச் சாலை) முதல் ஜல்லிக்கட்டு அரங்கம் வரை 3.30 கி.மீ நீளத்திற்கு, ஒரு வழித்தடச் சாலையிலிருந்து கடின புருவங்களைக் கொண்ட இரு வழித்தடச் சாலையாக (10 மீட்டர் அகலம்) அகலப்படுத்தும் பணி மற்றும் சீரான 25 மீட்டர் அகலத்திற்கு 8.10 ஹெக்டேர்

நில எடுப்பு உட்பட அனைத்து பணிகளும் 4 மாத காலத்திற்குள் ஒரு சாதனையாக முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.01.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மேலும், நிலுவைப் பணிகளான, ரூ.2036.06 கோடி மதிப்பிலான 1091.81 கி.மீ. நீளமுள்ளச் சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 298 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2023–24 ஆம் ஆண்டில் ரூ.2010.25 கோடி மதிப்பில் 1515.75 கி.மீ. நீளமுள்ளச் சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 354 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.5. ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் – மாவட்ட இதர சாலைகள்– சிறப்பு உறுப்புத் திட்டம்

2023–24 ஆம் ஆண்டில், ரூ.290.81 கோடி மதிப்பில், 221.74 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் 10 பாலங்கள் / சிறுபாலங்கள் கட்டுதல் ஆகியப் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இதன் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட சில முக்கிய பணிகள் பின்வருமாறு:

1. சேலம் மாவட்டத்தில், மாமம்ஜி சாலையில் கி.மீ 0/0 – 3/0–ல் ரூ.3.80 கோடி மதிப்பில் ஒரு வழித்தடச் சாலையிலிருந்து இடை வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

2. நீலகிரி மாவட்டத்தில், காட்டேரி எல்லன்ஹள்ளி சாலையில் கி.மீ 0/0–1/4–ல் ரூ.2.50 கோடி மதிப்பில் உறுதிப்படுத்துதல்.

3. மயிலாடுதுறை மாவட்டத்தில், எனங்குடி – பட்டவிளாகம் சாலையில் கி.மீ 2/6–3/8–ல் ரூ.1.31 கோடி மதிப்பில் உறுதிப்படுத்தும் பணி.

4. தேனி மாவட்டத்தில், சின்னமனூர் – எ.அழகாபுரி சாலையில் கி.மீ 3/0 – 4/2–ல் ரூ.2.20 கோடி மதிப்பில் இடை வழித்தடச் சாலையிலிருந்து இரு வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

5. இராமநாதபுரம் மாவட்டத்தில், சத்திரக்குடி – பூசேரி சாலையில் கி.மீ 1/0 முதல் 4/0 வரை ரூ.4.50 கோடி மதிப்பில் ஒரு வழித்தடச் சாலையிலிருந்து இடை வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி.

கூடுதலாக நிலுவைப்பணிகளான ரூ.175.98 கோடி மதிப்பிலான 153.87 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2023–24 ஆம் ஆண்டில், ரூ.229.86 கோடி மதிப்பில் 289.41 கி.மீ நீளமுள்ளச் சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் 1 பாலம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.6. சாலை ஓடுதளப்பாதை மேம்பாட்டுத்திட்டம்*(IRQP)*

2023–24 ஆம் ஆண்டில், ரூ.406.14 கோடி மதிப்பில் 1046.45 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிலுவைப்பணிகளாக ரூ. 510.94 கோடி மதிப்பில் 747.22 கி.மீ. நீளமுள்ள சாலை ஓடுதளப் பாதை மேம்பாடு பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2023–24 ஆம் ஆண்டில், ரூ. 469.83 கோடி மதிப்பில் 1699.77 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.7. நகர்ப்புறப் பகுதிகளில் சாலைப் பகுதிகளை மேம்படுத்துதல்

2023–24 ஆம் ஆண்டில், ரூ.104.62 கோடி மதிப்பில் 29.40 கி.மீ நீளமுள்ள 24 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 83.68 கி.மீ. நீளமுள்ள நிலுவைப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில், ரூ.578.76 கோடி மதிப்பில் 131.59 கி.மீ நீளமுள்ள 175 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.8. நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணிகள்

2023–24–ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.105.68 கோடி மதிப்பில் 14,744 மீ நீளமுள்ள வடிகால் பணிகள், 9 சிறுபாலங்கள் மற்றும் 1,28,266 மீ நீளமுள்ள மண் பிடிப்புக் குழிகள் உள்பட 46 நிரந்தர வெள்ளச் சீரமைப்புப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 14,329 மீ நீளமுள்ள வடிகால் பணிகள், 7 சிறுபாலங்கள் மற்றும் 60,710 மீ நீளமுள்ள மண் பிடிப்புக் குழிகள் ரூ.68.05 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

முனைவர் வி.திருப்புகழ் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ரூ.91.73 கோடி மதிப்பீட்டில் 13 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, சென்னை பெருநகரப் பகுதியில் வெள்ள அபாயத்தைத் தடுக்கும் முக்கியப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.1.1.9. முதலமைச்சரின் அனைத்து பருவக் காலங்களிலும் தங்குத் தடையற்றச் சாலை இணைப்பு என்ற திட்டம்

2021–22 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் போது, " முதலமைச்சரின் அனைத்து பருவ காலங்களிலும் தங்குத் தடையற்றச் சாலை இணைப்பு என்ற திட்டத்தின்" கீழ், 'தற்போதுள்ள தரைப்பாலங்களுக்குப் பதிலாக, உயர்மட்டப் பாலங்கள் 2026 ஆம் ஆண்டிற்குள் கட்டப்படும்' என்று அறிவிக்கப்பட்டது.

2023–24 ஆம் ஆண்டில், பல்வேறுத் திட்டங்களின் கீழ் ரூ758.82 கோடி மதிப்பில் 272 தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கடந்த மூன்று நிதியாண்டுகளில் 1113 தரைப்பாலப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 795 தரைப்பாலங்கள் உயர்மட்டப் பாலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

### 2.1.1.10. உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டச் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொகுதியிலும் மக்கள் பிரதிநிதிகளால் பரிந்துரைக்கப்பட்ட நிறைவேற்றப்படாத முக்கியக் கோரிக்கைகளுக்குத் தீர்வுக் காணப்படுகிறது.

ரூ.113.48 கோடி மதிப்பில் 14 சாலைப் பணிகளும், ரூ.29.70 கோடி மதிப்பில் 4 பாலப் பணிகளும், ரூ.194.00 கோடி மதிப்பில் ஒரு புறவழிச்சாலைப் பணியும் (நாமக்கல் புறவழிச்சாலை), ரூ.73.48 கோடி மதிப்பில் 12 சிறுபாலப் பணிகளும் மற்றும் 9 இடங்களில் மழைநீர் வடிகால் பணிகளும் பல்வேறுத் திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் ரூ.23.05 கோடி மதிப்பில் 7 சாலைப் பணிகள் மற்றும் 1 சிறுபாலம் கட்டும் பணியும் முடிவுற்றுள்ளது. மீதமுள்ளப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 2.1.2. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP-Chennai Metropolitan Development Plan)

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகரப் பகுதிக்குள் தடையற்ற, பாதுகாப்பானப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் இயக்கத்தை உறுதி செய்யும் பொருட்டு, நெடுஞ்சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 3 ஆண்டுகளில், இத்திட்டத்தில் கீழ்கண்டப் பணிகள் முடிக்கப்பட்டுப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து விடப்பட்டுள்ளன.

1. ரூ.93.50 கோடி மதிப்பில் கோயம்பேட்டில் நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் 01.11.2021 அன்று திறக்கப்பட்டது.

2. ரூ.95.21 கோடி மதிப்பில் மேடவாக்கத்தில் தாம்பரம் – வேளச்சேரி இருவழித்தடச் சாலை மேம்பாலம் 13.05.2022 அன்று திறக்கப்பட்டது.

3. ரூ.145.49 கோடி மதிப்பில் வேளச்சேரி – விஜயநகரம் சந்திப்பில் இரண்டு அடுக்குச் சாலை மேம்பாலம் 01.11.2021 மற்றும் 17.09.2022 ஆகிய நாட்களில் திறக்கப்பட்டது.

4. ரூ.6.29 கோடி மதிப்பில் ஜி.எஸ்.டி சாலையைக் கடக்க நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் மற்றும் தாம்பரம் இரயில் நிலையம் அருகில் தற்போதுள்ள இரயில்வே நடைமேம்பாலத்தைப் பயணச்சீட்டு மையத்துடன் இணைத்தல் 26.04.2023 அன்று திறக்கப்பட்டது.

5. ரூ.58.64 கோடி மதிப்பில் மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அருகில் திருவொற்றியூரில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உயர்மட்டப் பாலம் 07.09.2023 அன்று திறக்கப்பட்டது.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட சில திட்டங்கள் பின்வருமாறு:

### 2.1.2.1. சாலை மேம்பாலங்கள் (Grade Separator) / வாகனச் சுரங்கப்பாதை (Vehicular Under Pass)

i. மத்திய கைலாஷ் சந்திப்பில் சர்தார் பட்டேல் சாலை முதல் ராஜீவ் காந்தி சாலை வரை ரூ.60.69 கோடி மதிப்பில் இருவழித்தடச் சாலை மேம்பாலப்பணி நடைபெற்று வருகிறது.

ii. மவுண்ட் – பூந்தமல்லி – ஆவடி சாலையில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை ரூ.314.48 கோடி மதிப்பில் நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் மடிப்பாக்கத்தில் ரூ.45.50 கோடி மதிப்பில் வாகனச் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள். பெருநகர அலகினால் முன்மொழியப்பட்ட இத்திட்டங்களின் நேர்பாடு சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் நேர்பாடுடன் இணைவதால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iii. காட்டுப்பாக்கம் சந்திப்பில் நான்கு வழித்தடச் சாலை மேம்பாலம் அமைக்கும் பணியில், ஒரு பகுதி மெட்ரோ இரயில் திட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

iv. 6 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் ரூ.3.70 கோடி மதிப்பிலும் மற்றும் 5 பணிகளுக்கு நில எடுப்பு தயாரிக்கும் பணிகள் ரூ.536.68 கோடி மதிப்பிலும் i) ஆவடி சந்திப்பு, ii) குன்றத்தூர் சந்திப்பு, iii) வேளச்சேரி – தாம்பரம் சாலையில் கைவேலி சந்திப்பு, iv) கொரட்டூர் சந்திப்பு, v) வானகரம் சந்திப்பு, vi) அம்பத்தூர் தொழிற் பேட்டை பேருந்து நிலையம் சந்திப்பு (விரிவான திட்ட அறிக்கை மட்டும்) ஆகிய சந்திப்புகளில் நடைபெற்று வருகின்றன.

### 2.1.2.2. உயர் மட்டப் பாலங்கள்:

i. பருத்திப்பட்டில் கூவம் ஆற்றின் குறுக்கே ரூ.18.37 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலப்பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

ii. உயர்மட்டப் பாலம் கட்டுதல் பணி: அ) கூவம் ஆற்றின் குறுக்கே பாடிக்குப்பம் பகுதியில் விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்பு

பணிகள் முடிவுற்று பணிகள் துவங்கப்படவுள்ளன. ஆ) கூவம் ஆற்றின் குறுக்கே நொளம்பூரில் ரூ.87.77 கோடி மதிப்பில் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன

iii. சேலையூர் அருகே இராஜகீழ்ப்பாக்கம் ஏரியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மற்றும் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.1.2.3. சாலைப் பணிகள்

i. தற்போதுள்ள நான்கு வழித்தட கிழக்கு கடற்கரைச் சாலையை ஆறுவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணிகள், கொட்டிவாக்கம் பகுதியில் 0.935 கி.மீ. நீளத்திற்கு, ரூ.18.86 கோடி மதிப்பிலும், பாலவாக்கம் பகுதியில் 1.15 கி.மீ. நீளத்திற்கு ரூ.17.43 கோடி மதிப்பிலும், மற்றும் கிழக்கு கடற்கரைச் சாலையில் நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் 6.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.134.58 கோடி மதிப்பிலும் நடைபெற்று வருகின்றன.

ii. கிழக்கு கடற்கரைச் சாலை மற்றும் ராஜீவ் காந்தி சாலை (ஓ.ம்.ஆர்) ஆகிய சாலைகளை நீலாங்கரையில் இணைக்கும் இணைப்புச் சாலை பணியில் ஓ.ம்.ஆர் முதல் பக்கிங்காம் கால்வாய் வரை உள்ள சாலைப் பணி ரூ.18.25 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. பக்கிங்காம் கால்வாய் முதல் கிழக்கு கடற்கரைச் சாலை வரை மீதமுள்ள இணைப்பிற்கு நில எடுப்பு பணி நடைபெற்று வருகிறது.

iii. ஜி.எஸ்.டி சாலையை பெருங்களத்தூரிலிருந்து வேளச்சேரி – தாம்பரம் சாலையுடன் மாடம்பாக்கத்தில் இணைக்கும் வகையில், 9.30 கி.மீ நீளத்திற்கு ஆறு வழித்தட தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணியில் மப்பேடு பகுதியில் 3.05 கி.மீ. நீளத்திற்கு ரூ.25.00 கோடி மதிப்பில்

பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது. மேலும், நெடுங்குன்றம் பகுதியில் 2.63 கி.மீ நீளத்திற்கு ரூ.36.69 கோடி மதிப்பிலும் மற்றும் புத்தூர் பகுதியில் 1.55 கி.மீ. நீளத்திற்கு ரூ.55.77 கோடி மதிப்பிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பகுதிகளில் வனத்துறை நிலத்தை நிலமாற்றம் செய்யும் பணிகள் உட்பட நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.1.2.4. பாதசாரிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் – நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலங்கள்:

2023–24 ஆம் ஆண்டில், பெரிய மேற்கத்தியச் சாலையில் (GWT) நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் உள்வட்டச் சாலையில் (IRR) செந்தில் நகர் சந்திப்பு ஆகிய 2 இடங்களில் ரூ.30.67 கோடி மதிப்பில் நடைமேம்பாலங்கள் அமைக்கும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், முகப்பேர் டி.ஏ.வி மற்றும் வேலம்மாள் பள்ளி அருகில் நடைமேம்பாலம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 2.1.2.5. இரயில்வே மேம்பாலம் கட்டுதல்

2023–24 ஆம் ஆண்டில், உள்வட்டச் சாலையில் பாடி மேம்பாலம் அருகில் உள்ள இரயில்வே மேம்பாலத்தை ரூ.139.17 கோடி மதிப்பில் அகலப்படுத்தும் பணியில், நெடுஞ்சாலைப் பகுதி பணிகள் துவங்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2023–24 ஆம் ஆண்டில், **ரூ.405.29 கோடி** செலவிடப்பட்டுள்ளது.

## 2.2. மாநில நிதியின் கீழ் ஊராட்சி ஒன்றிய சாலைகள் / ஊராட்சிச் சாலைகளை மாவட்ட இதரச் சாலைகளாக தரம் உயர்த்துதல்

2021–22 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின் போது, "10,000 கி.மீ நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகள் மாவட்ட இதரச் சாலைகளாக (ODR)

தரம் உயர்த்தப்படும்" என்று அறிவிக்கப்பட்டது. ஊரகச் சாலைகளை தரம் உயர்த்துவதன் மூலம் கிராமப் பொருளாதாரம் மேம்பட வழிவகுக்கும் என்பதால் அரசு இத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து வருகிறது. இதுவரை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை 4110 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி சாலைகளைத் தரம் உயர்த்துவதற்காக ஒப்படைத்துள்ளது. அவற்றில், 2786.58 கி.மீ நீளமுள்ளச் சாலைகள் ரூ.3056.01 கோடி மதிப்பில் தரம் உயர்த்த எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் இதுவரை, 1657 கி.மீ நீளத்தில் ரூ.1784.89 கோடி மதிப்பில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், நிலுவைப் பணிகளாக 2021–22 ஆம் ஆண்டில், 2486.04 கி.மீ நீளமுள்ள 1078 சாலைப் பணிகள் ரூ.2120.74 கோடி மதிப்பில் தரம் உயர்த்த எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 2447.82 கி.மீ நீளமுள்ள 1066 பணிகள் ரூ.2072.06 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன..

மொத்தத்தில், 2021–22 ஆண்டு முதல் 2023–24 ஆண்டு வரை 4104.82 கி.மீ நீளமுள்ள 1823 ஊராட்சி ஒன்றியச் சாலைகள் / ஊராட்சிச் சாலைகள் ரூ.3856.95 கோடி மதிப்பில் மாவட்ட இதரச் சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 2023–24 ஆம் ஆண்டில் ரூ.1823.59 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 2.3. புறவழிச்சாலைகள் அமைத்தல்

பரபரப்பான நகரப்பகுதிகள் / நகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலால் பயண நேரம் அதிகரிக்கிறது. இவை மட்டுமல்லாது, எரிபொருள் செலவுகள் உள்ளிட்ட வாகன இயக்கச் செலவுகள் ஆகியவற்றால் சாலைப் பயனாளர்களுக்குக் கூடுதல் சுமை ஏற்படுகிறது. இத்தகைய சிரமங்களைக் குறைப்பதற்குப் புறவழிச்சாலைகள் அமைப்பது ஒரு மாற்று வழி/தீர்வாக உள்ளது. புறவழிச்சாலைகள் இரண்டு முக்கியமான கூறுகளைக் கொண்டுள்ளன, அவை, அ) நிலம் கையகப்படுத்துதல் மற்றும் ஆ) புறவழிச்சாலை அமைத்தல்.

2023–24–ஆம் ஆண்டில், துறையூர், நாமக்கல் (கட்டம் I, II மற்றும் III) மற்றும் திருப்பத்தூர் ஆகிய 3 இடங்களில் ரூ.283 கோடி மதிப்பில் புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கூடுதலாக, நிலுவைப் பணிகளான 18 புறவழிச்சாலைப் பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன. இவற்றில் இராசிபுரம் (கட்டம் –I பிரிவு– 2), திருத்துறைப்பூண்டி– I, பார்த்திபனூர் மற்றும் பவானி (கட்டம்– II) ஆகிய 4 புறவழிச்சாலைப் பணிகள் ரூ.113.98 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அம்பாசமுத்திரம், பவானி (கட்டம்–I), குன்னூர், பொள்ளாச்சி மேற்கு புறவழிச்சாலை, திருச்செங்கோடு, திருத்தணி, அருப்புக்கோட்டை மேற்கு புறவழிச்சாலை, கோயம்புத்தூர் மேற்கு வட்டச் சாலை, கமுதி, கேளம்பாக்கம், திருப்போரூர், முதுகுளத்தூர், ஜலகண்டபுரம் மற்றும் சிவகங்கை– I ஆகிய 14 புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும், 61 புறவழிச்சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற ஆயத்தப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

## 2.4. இணைப்புச்சாலை அமைத்தல்

திருப்பரங்குன்றம் அருகே பசுமலையில் ரூ.41.89 கோடி மதிப்பில் இணைப்புச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இராஜபாளையம் இணைப்புச் சாலைக்கான நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. ஈரோடு – பெருந்துறை – காங்கேயம் சாலை (மா.நெ–96) முதல் ஊட்டி – கோத்தகிரி – மேட்டுப்பாளையம் – சத்தி – கோபி – ஈரோடு சாலை (மா.நெ–15) வரை வில்லரசம்பட்டி வழியாக கனிராவுதர்குளம் அருகே சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி ரூ.20.85 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது .

## 2.5. உயர்மட்டப் பாலங்கள்அமைத்தல்

நீர்நிலைகளின் குறுக்கே குறிப்பாக ஆறுகளின் குறுக்கே கட்டப்படும் பாலங்கள் தடையற்றப் போக்குவரத்தை அனைத்து காலங்களிலும் உறுதி செய்கிறது. கடந்த

மூன்று ஆண்டுகளில் 277 உயர் மட்டப் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

**மாநில நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்படும் உயர்மட்டப் பாலங்கள்**

2023–24 ஆம் ஆண்டில் 13 உயர்மட்டப் பாலப் பணிகள் ரூ.399.82 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. புதிதாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளில் சில பின்வருமாறு;

1. காங்கேயநல்லூர் முதல் சாத்துவாஞ்சேரி வரை ரூ.90.66 கோடி மதிப்பில் பாலாற்றின் குறுக்கே 3.2 கி.மீ நீளத்திற்கு உயர்மட்டப் பாலம் அமைத்தல்.
2. நெரும்பூர்–புதுப்பட்டினம் சாலையில் கி.மீ 0/4–1/0 முதல் இரும்புலிச்சேரி வழியாக இடையத்தூர் சாலை வரை பாலாற்றின் குறுக்கே ரூ.51.87 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் திரும்பக் கட்டுதல்.
3. கள்ளிப்பாடி – காவனூர் கிராமங்களை இணைக்கும் வகையில் வெள்ளாற்றின் குறுக்கே ரூ.27.18 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டுதல்.

கூடுதலாக, 2021–22 ஆம் ஆண்டில், ரூ.443.73 கோடி மதிப்பிலான 33 நிலுவைப் பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளில், 31 உயர்மட்டப் பாலங்கள் ரூ.359.78 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட சில பணிகள் பின்வருமாறு:

1. வல்லம் – கள்ளப்பெரம்பூர் சாலையில் முதலமுத்துவாரி வடிகாலின் குறுக்கே கி.மீ.4/6–ல் ரூ.6.04 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி.
2. குருமந்தூர் – கடத்தூர் சாலையில் கி.மீ.4/2–இல் கீழ்பவானி கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய குறுகியப் பாலத்திற்கு மாற்றாக ரூ.3.33 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி.

3. உத்திரமேரூர் காஞ்சிபுரம் சாலையில் கி.மீ.11/2–ல் செய்யாற்றின் குறுக்கே ரூ. 21.56 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி.

**நபார்டு கடனுதவியின் கீழ் செயல்படுத்தப்படும் உயர்மட்டப் பாலங்கள்**

நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி(RIDF) யின் கீழ் தரைப்பாலங்கள்/ வலுவிழந்த பாலங்கள்/ குறுகலானப் பாலங்களுக்குப் பதிலாக உயர்மட்டப் பாலங்கள் கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. நபார்டு வங்கி கடன் உதவி மூலம் 80 சதவிகிதமும் மாநில நிதியிலிருந்து 20 சதவிகிதமும் பெறப்படுகிறது. 2023–24 ஆம் ஆண்டில் நபார்டு வங்கி கடனுதவியுடன் 4 உயர்மட்டப் பாலப்பணிகள் ரூ.52.00 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதலாக, ரூ.979.28 கோடி மதிப்பிலான 153 உயர்மட்டப் பாலப் பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டன. அதில் 99 உயர்மட்டப் பாலப் பணிகள் ரூ.399.13 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில், ரூ.833.39 கோடி நிதியுதவியுடன் 246 உயர்மட்டப் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

## 2.6. இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்ப்பாலங்கள்/ வரைறுக்கப்பட்டச் சுரங்க பாதைகள்அமைத்தல்

**இரயில்வேத் திட்டப் பணிகள் (RWP)**

இரயில்வேக் கடவுகளில், கணக்கீட்டின்படி, ஒரு நாளின் இரயில் வாகன அலகு (TVU) ஒரு இலட்சத்திற்கு அதிகமாகும்போது, தற்போதுள்ள இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் / கீழ்ப்பாலம் கட்டும் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

2023–24 ஆம் ஆண்டில் ரூ.143.22 கோடி மதிப்பில் புதியப் பணிகளாக நான்கு இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ரூ.2607.35 கோடி மதிப்பில் 59 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலப் பணிகள்

நிலுவைப் பணிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் 9 பணிகள் ரூ.426.06 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. 34 பணிகள் ரூ.1638.99 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 16 பணிகள் கட்டுமானத்திற்கு முந்தைய நிலையில் உள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில், ரூ. 836.20 கோடி மதிப்பில் 22 இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன.

**மாநில நிதியுதவியின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகள்**

இரயில்வேக் கடவுகளில், கணக்கீட்டின்படி, ஒரு நாளின் இரயில் வாகன அலகு(TVU) ஒரு இலட்சத்திற்கும் குறைவாக இருக்கும் இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் கட்டும் பணிகள் இரயில்வேத் துறையுடன் பணப்பகிர்வின் அடிப்படையில் மேற்கொள்ள இயலாது. இருப்பினும், அந்த இடத்தின் அல்லது தடத்தின் முக்கியத்துவம் காரணமாக, அத்தகைய இடங்களுக்கு இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்பாலங்கள் தேவைப்படுகிறது. அது போன்றப் பணிகளை மாநில அரசின் நிதி மூலமாக மட்டுமே மேற்கொள்ள முடியும். திருப்பூரில் சிக்கன்னா கல்லூரி அருகே ரூ.42.76 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலப் பணி நடைபெற்று வருகிறது.

**மத்தியச் சாலை மற்றும் உட்கட்டமைப்பு நிதி (CRIF )– சேது பந்தன்**

2023–24 ஆம் ஆண்டில், நீடாமங்கலத்தில் ரூ.170.00 கோடி மதிப்பில் இரயில்வே மேம்பாலம் (கடவு எண்.20 மற்றும் கடவு எண் 1) கட்டும் பணிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதிக்கீடு வழங்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.7. சாலை மேம்பாலங்கள்

நகர்ப்புறங்களில் காணப்படும் தற்போதுள்ள சாலைகள், கட்டமைப்பைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலைகளில் சாலை மேம்பாலங்கள் அமைப்பது அவசியமாகிறது. போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைச் சந்திப்புகள் / அமைவிடங்களில் போக்குவரத்து இயக்கத்தை எளிதாக்க, சாலை மேம்பாலங்கள் அமைக்கப்படுகின்றன. இது செலவைக்

கருத்தில் கொண்ட, நீண்ட கால நடவடிக்கையாகும். இத்துறையால் எடுக்கப்பட்ட முக்கியச் சாலை மேம்பாலங்கள் பின்வருமாறு:

1. கோயம்புத்தூர் மாநகரில், உக்கடம் – ஆத்துப்பாலத்தில் ரூ.140.49 கோடி மதிப்பில் சாலை மேம்பாலப் பணிமுடிவுற்றது. மேலும், இம்மேம்பாலத்தின் நீட்சிப் பணி ரூ. 265.44 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது .

2. மதுரை மாநகரம், கோரிப்பாளையம் சந்திப்பில் வாரணாசி – கன்னியாகுமரி சாலை (SHU73) கி.மீ 440/100–441/0 வரை மற்றும் மதுரை – அழகர்கோவில் – மேலூர் சாலை (SH72A) கி.மீ 0/0–0/6 வரை ரூ.190.04 கோடி மதிப்பில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

3. மதுரை–தொண்டி சாலையில் (அப்போலோ மருத்துவமனை சந்திப்பு) கி.மீ.1/2ல் சாலை மேம்பாலம் கட்டும் பணி ரூ.150.28 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

4. வண்டலூர்– வாலாஜாபாத் சாலை (படப்பை) கி.மீ.37/6–38/4–ல் ரூ.25.52 கோடி மதிப்பில் சாலை மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 2.8. உயர்மட்டச் சாலைகள்

பெரும் நகரங்களில் தடையின்றி சீரானப் போக்குவரத்து செல்வதை உறுதிச் செய்வதற்காக உயர்மட்டச் சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன. துறையால் எடுத்துக் கொள்ளப்பட்ட சில உயர்மட்டச் சாலைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன;

1. கோயம்புத்தூர் மாநகரில் அவினாசி சாலையில் கோல்ட்வின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை 10.10 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்கும் பணி ரூ.1621.30 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

2. தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உயர்மட்டப் சாலை அமைக்கும் பணி ரூ.621 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

## 2.9. ஒன்றிய அரசு நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.9.1. தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள்

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 6805 கி.மீ. இதில் 1677 கி.மீ நீளம் மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலமாகவும், மீதமுள்ள 5128 நீளம் கி.மீ இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் மூலமாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இச்சாலைகள் ஒன்றியச் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் வழங்கப்படும் நிதியைக் கொண்டு மேம்படுத்தப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.

#### 2.9.1.1. தேசிய நெடுஞ்சாலைத் திட்டப்பணிகள் – ஆண்டுத்திட்டம்

2023–24–ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது;

i. தே.நெ.209 – கோயம்புத்தூர் – சத்தியமங்கலம் – தமிழ்நாடு / கர்நாடக எல்லை (NH 181) சாலையை கடினப் புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தட/இரு வழித்தடச் சாலைக்கு ரூ.639.18 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணி.

ii. ரூ.18.36 கோடி மதிப்பில் தேசிய நெடுஞ்சாலை–381A அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல் மற்றும் தேசிய நெடுஞ்சாலை–85ல் பாதுகாப்புப் பணிகள் ஆகிய 2 தரம் உயர்த்தும் பணிகள்.

435.85 கி.மீ நீளத்திற்கு ரூ.2761.09 கோடி மதிப்பிலான 4 புறவழிச்சாலை (திருவையாறு, பாகலூர், மதுரை அச்சம்பத்து – விராட்டிபத்து மற்றும் குடியாத்தம்)

அமைக்கும் பணிகள் உட்பட 49 சாலைப்பணிகள், ரூ.951.89 கோடி மதிப்பிலான 28 பாலப்பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில், 2023–24–ஆம் ஆண்டில் 236.97 கி.மீ நீளத்திற்கு சாலைப் பணிகள் மற்றும் 7 பாலப்பணிகள் (2 சாலை மேம்பாலம், 2 உயர்மட்டப் பாலம், 1 சிறு பாலம், 2 பாலங்களைப் புனரமைத்தல் பணி) முடிக்கப்பட்டுள்ளன. 2023–24–ல் முடிக்கப்பட்ட முக்கியப் பணிகள் பின்வருமாறு;

**அட்டவணை 9: முடிக்கப்பட்ட முக்கிய தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்**

**(ரூ. கோடியில்)**

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பு** |
|---|---|---|
| 1 | விழுப்புரம் – புதுச்சேரி – நாகப்பட்டினம் சாலை (தே.நெ.45A) கி.மீ 59/8 – 59/10–ல் (கடலூர் நகர்ப்பகுதி) தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல் | 26.80 |
| 2 | கோயம்புத்தூர் – மேட்டுப்பாளையம் – ஊட்டி – தமிழ்நாடு/கர்நாடக எல்லைச் சாலை (தே.நெ.181) கி.மீ 362/790 – 364/555–ல் (பெரியநாயக்கன்பாளையம் சந்திப்பு) சாலை மேம்பாலம் அமைத்தல் | 115.57 |
| 3 | மதுரை – கொச்சின் சாலை (தே.நெ 49 நீட்சி) கி.மீ 5/10 கோச்சடை சந்திப்பில் சாலை மேம்பாலம் அமைத்தல் | 53.95 |
| 4 | தே.நெ 209 கி.மீ 229/2–4 –ல் பவானி ஆற்றின் குறுக்கே கூடுதல் இரு வழிப் பாலம் கட்டுதல் | 11.74 |

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பு |
|---|---|---|
| 5 | சேலம் – திருப்பத்தூர் – வாணியம்பாடி சாலையில் (தே.நெ.179A) ஏ.பள்ளிப்பட்டி முதல் ஊத்தங்கரை வரை 44.00 கி.மீ நீளத்திற்கு இருவழித்தடத்திலிருந்து கடினப் புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் | 320.00 |
| 6 | திருச்சி – இராமநாதபுரம் சாலையில் (தே.நெ.336) திருச்சி முதல் மாத்தூர் வரை 10.00 கி.மீ நீளத்திற்கு கடினப் புருவங்களுடன் கூடிய நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் | 68.00 |
| 7 | முசிறி – நாமக்கல் சாலையில் (தே.நெ 381B) 26.89 கி.மீ நீளத்திற்கு கடினப் புருவங்களுடன் கூடிய இரு/நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் | 184.15 |
| 8 | திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம் – மடத்துக்குளம் – பொள்ளாச்சி சாலையில் (தே.நெ.83) 7 விபத்து கரும்புள்ளிகளைச் (இராமையன்பட்டி, பாலம்ராஜக்காபட்டி, இடையாப்பட்டி, முத்தனம்பட்டி, பி.எஸ்.என்.ஏ கல்லூரி, கதிராயன்குளம், மாங்கரை பிரிவு) சீரமைத்தல் | 62.17 |

தூத்துக்குடி – திருச்செந்தூர் – கன்னியாகுமரி சாலையை நான்கு வழித்தடச் சாலையாக மேம்படுத்துதல் மற்றும் 3 புறவழிச் சாலைகள் (வேலூர், வேட்டவலம் மற்றும் திருவையாறு) ஆகிய பணிகளுக்கான நில எடுப்பு ரூ.559.87 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது. திட்டத் தொகுப்புக்காக 9 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டுத் திட்டத்தின் கீழ் 2023–24 ஆம் ஆண்டில், ரூ.1261.77 கோடி செலவிடப்பட்டுள்ளது.

#### *2.9.1.1.1.* சேதுபாரதம் திட்டம்

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள இரயில்வேக் கடவுகளுக்கு பதிலாக இரயில்வே மேம்பாலங்கள் / கீழ்ப்பாலங்கள் அமைக்க சேது பாரதம் என்ற புதியத் திட்டத்தின் கீழ் 6 இரயில்வே மேம்பாலங்கள் கட்டும் பணிக்கு ரூ.412.11 கோடி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### 2.9.1.2. ஒன்றிய அரசு நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

#### *2.9.1.2.1.* மத்தியச் சாலை மற்றும் உள்கட்டமைப்பு நிதித் திட்டம்

2022–23 ஆம் ஆண்டில், 102.935 கி.மீ நீளமுள்ள 23 சாலைப் பணிகள் ரூ.342.41 கோடி மதிப்பிற்கும், 24 பாலப்பணிகள் ரூ.313.35 கோடி மதிப்பிற்கும் மொத்தமாக ரூ.655.76 கோடிக்கு ஒன்றியச் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில், 25.41 கி.மீ நீளமுள்ள 7 சாலைப் பணிகள் ரூ.131.58 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், 19 பாலப் பணிகளுக்கு விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது

#### *2.9.1.2.2.* பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் "மாவட்ட இதர சாலைகள்" ஒன்றிய அரசினால் வழங்கப்படும் நிதியின் மூலம் மேம்படுத்தப்படுகின்றன. 2021–22 ஆம் ஆண்டில் 31.98 கி.மீ நீளமுள்ள 4 சாலைப் பணிகளுக்கு ரூ.34.16 கோடி ஒப்புதலை ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகம் வழங்கியுள்ளது. இவற்றில், 3 சாலைப் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 1 பணி நடைபெற்று வருகிறது.

## 2.10. வைப்பு நிதியின் கீழ் பணிகள்

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு மற்றும் தேசிய நெடுஞ்சாலை அலகு ஆகிய அலகுகளின் மூலம் சில பணிகள் வைப்பு நிதிப் பணிகளாக எடுத்துக்கொள்ளப் படுகின்றன. இப்பணிகளுக்கு பிற நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு பொதுவாக தொழில் மையங்களுக்கு செல்லும் அணுகுச் சாலைப் பணிகளை மேற்கொள்கிறது.

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகால் எடுத்துக்கொள்ளப்பட்ட சில வைப்பு நிதிப்பணிகள் பின்வருமாறு;

1. கவரப்பேட்டை–சத்தியவேடு சாலை (மா.நெ.52) முதல் மண்ணலூர் சிப்காட் தொழிற்பூங்கா வரை (கி.மீ. 0/0 – 4/110) அணுகுச் சாலை அமைக்கும் பணி ரூ.54.41 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

2. பணப்பாக்கம் சிப்காட் அணுகுச் சாலை அமைக்கும் பணி கி.மீ. 0/0 முதல் 0/800 வரை ரூ.26.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

3. சிப்காட் மற்றும் போச்சம்பள்ளி – கோதண்டப்பட்டி இணைப்புச்சாலை கி.மீ 0/0–1/550–ல் கடினப் புருவத்துடன் கூடிய இருவழித்தடத்தை நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணி ரூ.8.40 கோடி மதிப்பில் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது.

கீழ்கண்டச் சாலை மேம்பாட்டுப் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய வைப்பு நிதியின் கீழ் மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டன.

1. தே.நெ.45–ல் கூடுவாஞ்சேரி முதல் செட்டிப்புண்ணியம் (மஹிந்திரா சிட்டி) வரை உள்ள 13.30 கி.மீ சாலையினை 4 வழித்தடத்திலிருந்து 8 வழித்தடச்

சாலையாக அகலப்படுத்தும் பணியானது ரூ.230.69 கோடி மதிப்பிற்கு 3 தொகுப்புகளாக எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றன.

2. தே.நெ.4–ல் மதுரவாயல் புறவழிச்சாலை முதல் ஸ்ரீபெரும்புதூர் சுங்கச் சாவடி வரை உள்ள 23.20 கி.மீ சாலையினை 4 வழித்தடத்திலிருந்து 6 வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணியானது ரூ.428.95 கோடி மதிப்பிற்கு 6 தொகுப்புகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், 5 தொகுப்பு பணிகள் முடிவுற்று, மீதமுள்ள 1 தொகுப்பு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

3. 85.00 கி.மீ நீள தே.நெ 544H தொப்பூர் – மேட்டூர் – பவானி – ஈரோடு சாலையைக் கடினப் புருவங்களுடன் கூடிய 2 வழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணியானது ரூ.186.50 கோடி மதிப்பிற்கு 4 தொகுப்புகளாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், 1 தொகுப்பு பணி முடிவுற்று, மீதமுள்ள 3 தொகுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.11. சாலைப் பாதுகாப்புப் பணிகள்

சாலை விபத்துக்களைக் குறைப்பதற்காக சந்திப்புகளை மேம்படுத்துதல், வேகத்தடைகள் அமைத்தல், அறிவிப்பு பலகைகள் அமைத்தல் மற்றும் பாதுகாப்புப் பணிகள் போன்ற குறுகியக் கால சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இத்துறையின் சாலைப் பாதுகாப்பு அலகின் வழிகாட்டுதல் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாலை மேம்பாலங்கள் கட்டுதல், வாகனச் சுரங்கப் பாதை அமைத்தல், சாலைகளை அகலப்படுத்துதல், சாலை வளைவுகளை நேராக்குதல் போன்ற நீண்டகால நடவடிக்கைகளும் நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (CRIDP) கீழ் செயல்படுத்தப்படும் சாலைப் பாதுகாப்புப் பணிகள்

2021–22–ஆம் நிதியாண்டில், ரூ.200 கோடி மதிப்பிலான 401 பணிகள் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சாலைப் பாதுகாப்பின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 398 பணிகள் ரூ.171.63 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

2022–23–ஆம் நிதியாண்டில், ரூ.191.37 கோடி மதிப்பிலான 532 பணிகள் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.145.86 கோடி மதிப்பில் 519 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2023–24–ஆம் நிதியாண்டில், ரூ.134.65 கோடி மதிப்பிலான 165 பணிகள் ஒருங்கிணைந்தச் சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 89 பணிகள் ரூ.5.61 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன.

2023–24 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின் போது, மாண்புமிகு அமைச்சர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அவர்களால், மாநில நெடுஞ்சாலைகளில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய சாலைப் பாதுகாப்பு சீரமைப்புப் பணிகள் ரூ. 150 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இப்பணிகள் பயிற்சிப் பெற்ற சாலைப் பாதுகாப்புப் பொறியாளர்களால் மேற்கொள்ளப்பட்டச் சாலைப் பாதுகாப்புத் தணிக்கையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறது. இதனடிப்படையில், ரூ. 149.88 கோடி மதிப்பிலான 555 சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் விரைவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

## விபத்துக் கரும்புள்ளிகள் சீரமைப்பு

ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் (MoRTH) 2015–18 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்டத் தரவுகளின் அடிப்படையில்

தமிழ்நாட்டில் 1208 இடங்களில் விபத்துக் கரும்புள்ளிகள் கண்டறியப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் தேசிய நெடுஞ்சாலைச் சாலைகளில் 131 இடங்களில் விபத்துக் கரும்புள்ளிகள் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் 781 கரும்புள்ளிகளுக்கு நீண்டகால அடிப்படையில் சீரமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள விபத்துக் கரும்புள்ளிகளைச் சீரமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

## சிறப்புப் பணிக்குழு – சாலைப் பாதுகாப்பு

உயிர் இழப்பு விபத்து நிகழ்வு குறைப்பை (FAIR) செயல்படுத்த சாலைப் பாதுகாப்புக்கானச் சிறப்புப் பணிக்குழு 15.03.2022 அன்று மாநில குற்றப் பதிவுப் பணியகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் தலைமையில் உருவாக்கப்பட்டது. இக்குழுவில், தலைமைப் பொறியாளர்(நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு அவர்களும் ஒரு உறுப்பினராக உள்ளார். சாலை விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புகளைக் குறைப்பதற்கானக் குறுகியக் கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகளைக் கண்டறியச் சிறப்புப் பணிக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பரிந்துரைகள் செயல்படுத்தப்படுவதையும் இக்குழுக் கண்காணித்து வருகிறது. குறுகியக் கால நடவடிக்கைகளுக்காக 2023–24 ஆம் ஆண்டில் ரூ.90.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## சந்திப்பு மேம்பாட்டுப் பணிகள்:

நெடுஞ்சாலைகளில் உள்ள சந்திப்புகள் விபத்துகள் ஏற்படும் இடமாகும். 2023–24–ஆம் ஆண்டில் விபத்துகள் நிகழக்கூடிய 72 சந்திப்புகளை மேம்பாடு செய்யும் பொருட்டு ரூ.110.26 கோடி மதிப்பில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது

## 2.12. பன்னாட்டு உதவி பெறும் திட்டங்கள்

### 2.12.1. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் (TNRSP)

பன்னாட்டு நிதியுதவித் திட்டமான தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II ஆனது, போக்குவரத்துச் செறிவு அதிகமுள்ள சாலைகளை மேம்படுத்த உலக வங்கி கடனுதவி ரூ.2122.90 கோடி (300.00 மில்லியன் அமெரிக்க டாலர்) உடன், ரூ.5171 கோடி மொத்த மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது. அ) தமிழ்நாட்டில் 1187.04 கி.மீ நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாரமரித்தல் மற்றும் ஆ) துறையின் நிறுவன செயல்திறன் மேம்பாடு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு.

### 2.12.1.1. *முடிக்கப்பட்ட பணிகள்*

பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறை ஒப்பந்தத்தின் கீழ் மாநிலத்தில் 471.96 கி.மீ நீளமுள்ளச் சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில், 427.96 கி.மீ நீளமுள்ளச் சாலைகள் கடினப் புருவங்களுடன் கூடிய இருவழித்தடச் சாலைகளாகவும் மற்றும் 44 கி.மீ நீளமுள்ளச் சாலைகள் நான்கு வழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்தப்பட்டுள்ளது. பொது தனியார் பங்களிப்பு (Public Private Partnership) முறையில் எடுத்துக்கொள்ளப்பட்ட 70.20 கி.மீ நீளமுள்ள ஒட்டன்சத்திரம் – தாராபுரம்– அவினாசிபாளையம் நான்குவழிச் சாலை (மா.நெ.37)–யின் பராமரிப்பு காலமான 8 ஆண்டுகளில் தற்சமயம் 4–ஆம் ஆண்டுப் பராமரிப்பில் உள்ளது.

### 2.12.1.2. *நடைபெற்று வரும் பணிகள்*

63.384 கி.மீ நீளம் கொண்ட கீழ்கண்ட 3 பணிகள் ரூ.621.80 கோடி மதிப்பில் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் நடைபெற்று வருகின்றன.

1. மா.நெ 30–ல் மல்லியக்கரை – ஆத்தூர்சாலை (கி.மீ 81/125 – கி.மீ 91/200) உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல்.

2. மா.நெ 39–ல் திருநெல்வேலி – செங்கோட்டை –கொல்லம் சாலையில் கி.மீ 27+700 முதல் கி.மீ 50+600 வரை நான்கு வழித்தடச் சாலையாக உறுதிப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் (தொகுப்பு எண் II).

3. மா.நெ–15–ல் நான்கு வழிச்சாலை கோபி – ஈரோடு கி.மீ 123+000– 153+600 வரை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துதல்.

### 2.12.1.3. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாடு வாரிய (TNIDB) நிதி உதவியுடன் விரிவானத் திட்ட அறிக்கை தயாரித்தல்

தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய நிதியின் மூலம் 3319 கி.மீ. நீளமுள்ளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துவதற்கான விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ரூ.132.76 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் முதற்கட்டமாக, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–III–ன் கீழ் பன்னாட்டு நிதியுதவியுடன் 718.71 கி.மீ நீளமுள்ளச் சாலைகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

### 2.12.1.4. *நிறுவனத் திறன் மேம்பாடு மற்றும் சாலைப் பாதுகாப்பு குழுமம்*

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II இன் கீழ் ரூ.120.00 கோடி மதிப்பில் சாலைப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ்,

1. காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 95.60 கி.மீ. நீளத்திற்கு நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்பு (ITS) உள்ளிட்ட சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2. சாலைப் பாதுகாப்பு முன்முயற்சிகளின் கீழ் போக்குவரத்து, காவல், சுகாதாரம் மற்றும் கல்வித்துறை போன்ற பங்களிப்புத் துறைகளுக்கான ஆதரவு விரிவுப்படுத்தப்பட்டுள்ளன.

3. முன்னோடித் திட்டமாக சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள 36 பள்ளிகளில் முதற்கட்டமாக நடத்தப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக 261 பள்ளிகளுக்கும் விரிவுப்படுத்தப் படவுள்ளது.

## 2.12.2. சென்னை கன்னியாகுமரி தொழிற்தட மேம்பாட்டு திட்டம் (CKICP)

தமிழ்நாடு தொழிற்சாலைப் பகுதிகளை இணைக்கும் திட்டத்தின் கீழ் 589 கி.மீ நீளமுள்ள 16 மாநில நெடுஞ்சாலை தடங்கள், ஆசிய வளர்ச்சி வங்கியின் 484 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவியுடன், மேம்பாடு செய்யும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகள் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) ஒப்பந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றில் 72.43 கி.மீ. நீளமுள்ளச் சாலைகள் இருவழித் தடத்திலிருந்து கடினப் புருவங்களுடன் கூடிய நான்குவழித் தடமாகவும் மீதமுள்ள 516.57 கி.மீ. நீளமுள்ள சாலைகள் இருவழித் தடத்திலிருந்து கடினப் புருவங்களுடன் கூடிய இருவழித் தடமாகவும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கான, மொத்த மதிப்பு நில எடுப்பு உட்பட ரூ.7847.49 கோடி ஆகும். மொத்த கட்டுமான மதிப்பில் 80 சதவிகிதத் தொகை ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவி மூலமும் மீதமுள்ள 20 சதவிகிதம் மாநில அரசின் நிதி மூலமாகவும் பெறப்படுகிறது.

### 2.12.2.1. பணிகளின் முன்னேற்றம்

மொத்தமுள்ள 16 சாலை மேம்பாட்டுப் பணிகளில் ரூ.1,112.61 கோடி திட்ட மதிப்பிலான 5 சாலைப் பணிகள் (இ.பி.சி–05, இ.பி.சி–06, இ.பி.சி–10, இ.பி.சி–11 மற்றும் இ.பி.சி–13) முடிவுற்றுள்ளது. மீதமுள்ள 11 சாலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகள் 2024–25–ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.12.2.2. நிலம் கையகப்படுத்துதல் (LA) மற்றும் மறுவாழ்வு மறு குடியமர்வு (R&R)

இத்திட்டத்திற்காக 349 கிராமங்களில் மொத்தம் 445 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இதுவரை, 437 ஹெக்டேர் தனியார் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மீதம் கையகப்படுத்த வேண்டிய பரப்பு, தீர்வம் விசாரணை மற்றும் இறுதி தீர்வம் நிலையில் உள்ளது. இத்திட்டச் சீரமைப்பு காரணமாக அரக்கோணத்திற்கு அருகிலுள்ள மேல்பாக்கம் கிராமத்தில் இடம்பெயர்ந்த 41 பழங்குடியினர் குடும்பங்கள் ஆசிய வளர்ச்சி வங்கியின் சமூக பாதுகாப்பு கொள்கையின்படி, மறுகுடியமர்வு செய்யப்பட்டு வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் குடியிருப்புகள், அங்கன்வாடி, சமுதாயக்கூடம், கோயில், குடிநீர் வசதியுடன் கூடிய மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி, நீரேற்று அறை மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் உட்பட அனைத்து வசதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

## 2.12.3. சென்னை எல்லைச் சாலைத் திட்டம்

சென்னை எல்லைச் சாலையானது 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, பலதரப்பு மற்றும் இருதரப்பு நிதி நிறுவனங்களின் பன்னாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் நீளம் 132.87 கி. மீ. ஆகும். இது 5 சுமார் ரூ.15,625.90 கோடி செலவில் செயல்படுத்தப்படுகின்றது.

**அட்டவணை 10: சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் நீள விவரங்கள்**

(நீளம் கி.மீ.–ல்)

| பிரிவு | தொடக்கம் | முடிவு | நீளம் |
|---|---|---|---|
| I | எண்ணூர்துறைமுகம் | தச்சூர் | 25.40 |
| II | தச்சூர் | திருவள்ளூர் புறவழிச்சாலையின் தொடக்கம் | 26.10 |

| பிரிவு | தொடக்கம் | முடிவு | நீளம் |
|---|---|---|---|
| III | திருவள்ளூர் புறவழிச்சாலையின் தொடக்கம் | ஸ்ரீபெரும்புதூர் | 30.10 |
| IV | ஸ்ரீபெரும்புதூர் | சிங்கபெருமாள் கோயில் | 23.80 |
| V | சிங்கபெருமாள் கோயில் | மாமல்லபுரம் (பூஞ்சேரி சந்திப்பு) | 27.47 |
| **மொத்தம் நீளம் கி.மீ** | | | **132.87** |

இத்திட்ட சாலையின் முழு நீளமும் அணுகு கட்டுப்பாட்டுடன் இருபுறமும் இருவழிச் சேவைச் சாலைகளுடன் ஆறுவழி இரட்டைப் பாதையைக் கொண்டுள்ளது.

### 2.12.3.1. பிரிவு–1 (எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரை)

சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தின் பிரிவு – I, எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி தச்சூர் வரை சென்னை வெளிவட்டச் சாலைக்கு இணைப்புச் சாலையுடன் 25.40 கி.மீ நீளத்திற்கு ரூ. 3339.00 கோடி மதிப்பில் மேலாண்மை முகவராக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனம் (JICA) 40074 மில்லியன் ஜப்பான் யென் (ரூ.2473.70 கோடி) நிதியுதவியு அளிக்கிறது. இந்த திட்டத்தை 2025 –க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.12.3.2. பிரிவு 2, 3, 4 மற்றும் 5 (தச்சூர் முதல் மாமல்லபுரம் அருகில் பூஞ்சேரி வரை)

56.20 கி.மீ. நீளமுள்ள சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு – II மற்றும் III ஆனது தச்சூரில் தொடங்கி திருவள்ளூர் புறவழிச்சாலை வழியாக திருபெரும்புதூரில் முடிவடைகிறது. பிரிவு –II மற்றும் III ஆகியவை முறையே 26.10 கி.மீ மற்றும் 30.10 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதிகள் ரூ. 4899 கோடி மதிப்பில் மேலாண்மை முகவராக தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின்

மூலம் (TNRIDC) செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரிவு II & பிரிவு III க்கான நிதியுதவி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் (AIIB) மூலம் 378 மில்லியன் அமெரிக்க டாலரும் மற்றும் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் சர்வதேச மேம்பாட்டு நிதி அமைப்பின் (OPEC) மூலம் 100 மில்லியன் அமெரிக்க டாலரும் வழங்கப்படுகிறது. பிரிவு III–ற்கான கட்டுமான பணிகள் பொறியியல், கொள்முதல் மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் 3 தொகுப்புகளாக (EPC -03, EPC-04 & EPC-05) பிரிக்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

பிரிவு II–ற்கான கட்டுமான பணிகள் கீழ்க்கண்ட இபிசி தொகுப்பு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன..

- **EPC-01**: ரூ.820.59 கோடி ஒப்பந்த மதிப்பிற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருகிறது. இப்பணிகள் 2025–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- **EPC-02:** ரூ.719.10 கோடி ஒப்பந்த மதிப்பிற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருகிறது. இப்பணிகள் 2025–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

23.80 கி.மீ. நீளமுள்ள சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு IV திருபெரும்புதூரில் தொடங்கி சிங்கப்பெருமாள் கோவிலில் முடிவடைகிறது. மாநில நிதியுதவியுடன் இப்பணிகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளன. இச்சாலையை அணுகு கட்டுப்பாட்டுச் சாலையாக அமைக்க விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நடைபெற்று வருகிறது.

சென்னை எல்லைச் சாலை திட்டத்தின் பிரிவு V 27.47 கி.மீ. நீளத்திற்கு சிங்கப்பெருமாள் கோவிலில் தொடங்கி மாமல்லபுரம் அருகில் பூஞ்சேரி சந்திப்பில் (NH332A) முடிவடைகிறது. ரூ.747.92 கோடி மதிப்பில் 126.84 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி இறுதி கட்ட நிலையில் உள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிதி நிறுவனத்தின் (JICA) மூலம் 49847 மில்லியன் ஜப்பான் யென் (ரூ.2,784 கோடி) நிதியுதவி கோரப்படுகிறது.

## 2.13. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்

### 2.13.1. சென்னை வெளிவட்டச் சாலை

தேசிய நெடுஞ்சாலை – 32 ல் வண்டலூர் முதல் திருவொற்றியூர்– பொன்னேரி– பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூரில் முடிவடையும் பசுமை வழித்தடத் திட்டமான சென்னை வெளிவட்டச் சாலையின் திட்ட மேலாண்மை முகவராக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் செயல்படுகிறது. இத்திட்டமானது வடிவமைப்பு, கட்டுமானம், நிதி அளித்தல், இயக்குதல் பராமரித்தல் (DBFOT) அடிப்படையில் பொது தனியார் பங்களிப்புடன் (PPP mode) இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1. **கட்டம்–I:** தேசிய நெடுஞ்சாலை– 32 ல் வண்டலூர் முதல் தேசிய நெடுஞ்சாலை –716–ல் நெமிலிச்சேரி வரை ரூ.1081.40 கோடி மதிப்பில் 29.65 கி.மீ நீளமுள்ளச் சாலை

2. **கட்டம்–II:** தேசிய நெடுஞ்சாலை –716 ல் நெமிலிச்சேரி முதல் திருவெற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரை ரூ.1075.00 கோடி மதிப்பில் 30.50 கி.மீ. நீளமுள்ளச் சாலை.

இச்சாலையில் 19.01.2022 முதல் 4 சுங்கச்சாவடிகளில் சாலை உபயோகிப்பாளர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

### 2.13.2. சென்னை எல்லைச் சாலைத் திட்டம்

சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தின் பிரிவு–1 (எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரை) மற்றும் பிரிவு–5 (சிங்கப்பெருமாள் கோவில் முதல் பூஞ்சேரி வரை) ஆகிய பிரிவுகளுக்கு தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், திட்ட மேலாண்மை முகவராக செயல்பட்டு வருகிறது. பிரிவு–1–ல் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. பிரிவு–5 ல் நிலம் கையகப்படுத்தும் பணிகள் இறுதிக்கட்ட நிலையில் உள்ளது.

### 2.13.3. தகவல் தொழில்நுட்ப விரைவுச்சாலை நிறுவனம் (IT Express Way Ltd) (ITEL)

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமான தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம் இராஜீவ் காந்தி சாலையில், மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையுள்ள சாலையைப் பராமரிக்கிறது. சென்னை நகரின் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதி வழியாக செல்லும் இப்பிரதான சாலை, இரு புறமும் சேவைச் சாலைகள் அடங்கிய ஆறுவழி சாலையாகும். மேலும் பாதசாரிகள் இச்சாலையைக் கடப்பதற்காக 15 இடங்களில் நடைமேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

### 2.13.4. இராஜீவ் காந்தி சாலையில் இந்திரா நகர் சந்திப்பு மற்றும் டைடல் பார்க் சந்திப்புகளில் "U" வடிவ மேம்பாலம்

தகவல் தொழில் நுட்ப வழித்தடமான இராஜீவ் காந்தி சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சீரான போக்குவரத்தை அமைக்கவும் இச்சாலையில் இந்திரா நகர் மற்றும் டைடல் பார்க் ஆகிய சாலைச் சந்திப்புகளில் ரூ.108.13 கோடி திட்ட மதிப்பீட்டில் இரண்டு "U" வடிவ மேம்பாலங்கள் மேலாண்மை முகவராக,. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவற்றில், இந்திரா நகர் சந்திப்பு மேம்பாலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.11.2023 அன்று மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது. டைடல் பார்க் சந்திப்பில் மேம்பாலப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

### 2.13.5. கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் புறவழிச்சாலை அமைத்தல்

ஆறு வழித்தடச் சாலையாக, திருப்போரூர் புறவழிச்சாலை (7.45 கி.மீ நீளம்) மற்றும் கேளம்பாக்கம் (4.68 கி.மீ நீளம்) புறவழிச்சாலை அமைக்கும் பணிகள் ரூ. 314.73 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டுப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

## 2.14. தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் முற்றிலும் தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான ஒரு லாப நோக்கமற்ற நிறுவனமாகும். இந்நிறுவனம் பல்வேறு சாலை உட்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 2.14.1. தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

1) **வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில்** கி.மீ. 47/0 – 63/8 வரை நான்கு வழித்தடச்சாலையை ஆறுவழித்தடச் சாலையாக ரூ.180.09 கோடி மதிப்பில் மேம்படுத்தும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது.

2) **வண்டலூர் – வாலாஜாபாத் சாலையில்** கி.மீ. 37/6 – 38/4 –ல் ரூ. 26.65 கோடி மதிப்பில் சாலை மேம்பாலம் கட்டும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது..

3) **மதுரை சுற்றுச் சாலை:** மதுரை சுற்றுச் சாலையை நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி முடிவடைந்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மதுரை விமான நிலைய விரிவாக்கத்தின் பொருட்டு, மதுரை சுற்றுச் சாலையில் 8.00 கி.மீ. நீளத்திற்கு மாற்றுச் சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. நில எடுப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.40.50 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது .

4) **சென்னை எல்லைச் சாலை திட்டம்** : சென்னை எல்லைச் சாலைத் திட்டத்தின் II, III மற்றும் IV பிரிவுகளுக்கு மேலாண்மை முகவராக, தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் செயல்பட்டு வருகிறது .

பிரிவு II: தேசிய நெடுஞ்சாலை – 16 ல் தச்சூர் முதல் திருவள்ளூர் புறவழிச்சாலை தொடங்கும் இடம் வரை 26.10 கி.மீ நீளத்திற்கு

பணிகள் நடைபெற்று வருகிறது.

பிரிவு III: திருவள்ளூர் புறவழிச்சாலை தொடங்கும் இடம் முதல் தேசிய நெடுஞ்சாலை – 48 ல் திருப்பெரும்புதூர் வரையிலான 30.10 கி.மீ நீளத்திற்கு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

பிரிவு IV: தேசிய நெடுஞ்சாலை –48 ல் திருப்பெரும்புதூர் முதல் தேசிய நெடுஞ்சாலை – 32–ல் சிங்கப்பெருமாள் கோயில் வரையிலான 23.80 கி.மீ நீளத்திற்கு அணுகு கட்டுப்பாட்டுடன் கூடிய ஆறுவழித் தடச் சாலை அமைப்பதற்கு விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**5) கூடுவாஞ்சேரி மற்றும் சிங்கப்பெருமாள் கோயில் இரயில்நிலையங்களுக்கு இடையில் இரயில்வே கடவு (LC) எண். 47 க்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி:** இந்த இரயில்வே மேம்பாலம், சென்னை எல்லைச் சாலை திட்டம் பிரிவு IV மற்றும் பிரிவு V ஐ இணைக்கும் வகையில் உள்ளது. பணி நடைபெற்று வருகிறது .

# II. சிறு துறைமுகங்கள் அலகு

## 3. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாடு கடல்சார் வாரியமானது, தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/1996)இன் படி, 18.03.1997 முதல் மாநில துறைமுகங்களை நிர்வகித்து, கட்டுப்படுத்தி மற்றும் முறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலம், இந்தியாவின் இரண்டாவது மிக நீண்ட கடற்கரைப் பகுதியான 1076 கிலோமீட்டர் நீளம் கொண்டது. இந்த கடற்கரையில், சென்னை துறைமுகம், காமராஜர் துறைமுகம் (எண்ணூர்), மற்றும் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் (தூத்துக்குடி) ஆகிய மூன்று பெருந்துறைமுகங்களும், 17 சிறு துறைமுகங்களும் மதிப்புமிக்க உள்கட்டமைப்புகளாக அமைந்துள்ளன.

## 3.1. சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகளின் விவரம்

**அட்டவணை 11: சிறு துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகள்**

**(மெட்ரிக் டன்களில்)**

| வ எண் | துறைமுகத்தின் பெயர்கள் | ஏற்றுமதி/ இறக்குமதி | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்குகள் | சரக்கின் அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | எண்ணூர் சிறு துறைமுகம் | இறக்குமதி | 6 | திரவ அமோனியா | 40,412 | 40,412 |
| 2. | காட்டுப்பள்ளி துறைமுகம் | இறக்குமதி | 41 | இரும்பு | 3,64,315 | 48,52,315 |
| | | | 4 | இயந்திரங்கள் | 870 | |
| | | | 22 | பெட்ரோலியப் பொருட்கள் | 5,40,398 | |
| | | | 9 | பல்வகைச்சரக்குகள் | 1,75,180 | |
| | | | 449 | 20 அடி நிரப்பப் பட்டவை | 12,55,896 | |
| | | | | 40 அடிநிரப்பப் பட்டவை | 21,98,736 | |
| | | | | 20 அடிவெற்றுப் பெட்டகங்கள் | 32,472 | |

| வ எண் | துறைமுகத்தின் பெயர்கள் | ஏற்றுமதி/ இறக்குமதி | கப்பல்களின் எண்ணிக்கை | சரக்குகள் | சரக்கின் அளவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | 40 அடிவெற்றுப் பெட்டகங்கள் | 2,84,448 | |
| | | ஏற்றுமதி | | 20 அடிநிரப்பப் பட்டவை | 11,66,952 | 48,12,975 |
| | | | | 40 அடிநிரப்பப் பட்டவை | 20,41,296 | |
| | | | | 20அடி வெற்றுப் பெட்டகங்கள் | 5,51,652 | |
| | | | | 40 அடிவெற்றுப் பெட்டகங்கள் | 8,84,856 | |
| | | | 8 | இயந்திரங்கள் | 7,534 | |
| | | | 17 | கிரானைட் | 1,52,948 | |
| | | | 1 | இரும்பு | 164 | |
| | | | 1 | பல்வகை சரக்குகள் | 7,573 | |
| 3. | கடலூர் துறைமுகம் | இறக்குமதி | 43 | வினைல் குளோரைடு மோனாமர் | 3,29,886 | 3,29,887 |
| | | | – | பல்வகை சரக்குகள் | 1 | |
| | | ஏற்றுமதி | | பல்வகை சரக்குகள் | 3,895 | 3,914 |
| | | | – | இயந்திரங்கள் | 19 | |
| 4. | நாகப்பட்டினம் துறைமுகம் | இறக்குமதி | 13 | சமையல் எண்ணெய் | 74,527 | 74,527 |
| | | ஏற்றுமதி | – | பல்வகைச் சரக்குகள் | 164 | 164 |
| 5. | திருக்கடையூர் துறைமுகம் | இறக்குமதி | – | இயற்கை எரிவாயு | 3,701 | 3,701 |
| 6. | கூடங்குளம் | இறக்குமதி | 4 | இயந்திரங்கள் | 2,257 | 2,257 |
| 7 | உடன்குடி | இறக்குமதி | 1 | இயந்திரங்கள் | 2,257 | 2,257 |
| **மொத்தம்** | | **இறக்குமதி** | | | **53,05,626** | 1,01,22,679 |
| | | **ஏற்றுமதி** | | | **48,17,053** | |
| **பெருமொத்தம்** | | | **619** | | **1,01,22679** | 1,01,22,679 |

## 3.2. பாம்பன் துறைமுகம்

2023–2024 ஆம் ஆண்டில் 323 சிறுகலன்கள் இக்கால்வாயைக் கடந்து சென்றுள்ளன.

### 3.3. *இராமேசுவரம் துறைமுகம்*

2023–2024 ஆம் ஆண்டில் இராமேசுவரம் துறைமுகத்தில் அக்னி தீர்த்தக்கரையில் 1,69,964 பயணிகள் படகுப்போக்குவரத்து மூலம் பயணம் செய்துள்ளனர்.

### 3.4. *கன்னியாகுமரி துறைமுகம்*

கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும் மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், பயணிகள் படகுப் போக்குவரத்தினை, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினர் நடத்தி வருகின்றனர். 2023–2024 ஆம் ஆண்டில் 21,50,943 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

### 3.5. *சரக்குப்போக்குவரத்து*

2023–2024 ஆம் ஆண்டில் சிறுதுறைமுகங்கள் வாயிலாக 1,01,22,679 மெட்ரிக் டன் சரக்குகள் 619 கப்பல்கள் மூலம் கையாளப்பட்டுள்ளன.

## 4. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் மற்றும் தேசிய அனல் மின்கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என். டி. பி. சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, வடசென்னை, வல்லூரில் அமைந்துள்ள, அந்நிறுவனத்தின் 500 மெகாவாட் திறன்படைத்த மூன்று அலகுகளுக்குத் தேவையான இந்திய நிலக்கரி முழுவதையும் பாரதீப் மற்றும் தாம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூர் துறைமுகத்திற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலமாக எடுத்துவரும் பணியினை மேற்கொண்டுள்ளது.

இக்கழகம், குமரிமுனையிலிருந்து அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவுப்பாறைக்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக படகுப் போக்குவரத்தினை மேற்கொண்டு வருகிறது. தற்பொழுது, ஒவ்வொன்றும் தலா

150 இருக்கைகள் கொண்ட எம். எல். குகன், எம். எல். பொதிகை மற்றும் எம். எல். விவேகானந்தா ஆகிய மூன்று படகுகளை 11.08.1984 முதல் இயக்கி வருகிறது. மேலும், எம் .எல். தாமிரபரணி மற்றும் எம் .எல். திருவள்ளுவர் ஆகிய இரு புதிய படகுகள் மூலமாக 24.05.2023 முதல் வட்டக்கோட்டை வரை இயக்கப்பட்டு வருகிறது.

இக்கழகத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:

## 4.1. செயல்திறன் – நிலக்கரி இயக்கம்

2022–23 மற்றும் 2023–24 ஆகிய ஆண்டுகளில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின் செயல்திறன் பின்வருமாறு:

**அட்டவணை 13: கப்பல்களின் செயல்திறன்**

(இலட்சம் மெட்ரிக் டன்களில்)

| வாடகைக் கப்பல்கள் | 2022–23 | 2023–24 |
|---|---|---|
| வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின் எண்ணிக்கை | 04 | 04 |
| பயண எண்ணிக்கை | 97 | 79 |
| பயணம் ஒன்றுக்கு எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் சராசரி அளவு (மெட்ரிக் டன்) | 77,722 | 78,227 |
| **எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் மொத்த அளவு (இலட்சம் மெட்ரிக் டன்)** | **75.39** | **61.79** |

## 4.2. நிதிநிலை – நிலக்கரி இயக்கம்

கடந்த மூன்று ஆண்டுகளில், கழகத்தின் மொத்த நிதி நிலை செயல்திறன் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை14: நிதி நிலை விவரம்**

(ரூ.இலட்சத்தில்)

| வருடம் | மொத்த வருவாய் | நிகர இலாபம் | |
|---|---|---|---|
| 2020-21 | 29226.38 | 68.47 | 20.54 |
| 2022-23 | 42121.52 | (--)2867.33 | --- |
| 2023-24 | 35000.00 | 200.00 | --- |

## 4.3. கன்னியாகுமரி படகுத்துறை

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான படகுத் துறையின் நிதிநிலை மற்றும் செயல்திறன் பின்வருமாறு:

**அட்டவணை 15: நிதிநிலை மற்றும் செயல்திறன் விவரம்**

| | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|
| இயக்கப்படும் படகுகளின் எண்ணிக்கை | 03 | 03 | 05 |
| பயணித்த பயணிகளின் எண்ணிக்கை (ரூ. இலட்சத்தில்) | 5.47 | 21.36 | 21.31 |
| கட்டண வசூல் (ரூ. இலட்சத்தில்) | 265.64 | 1591.18 | 2265.94 |
| இயக்க லாபம் (ரூ. இலட்சத்தில்) | (-)144.80 | (-)333.47 | 940.54 |

**எ.வ.வேலு**

**பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள்**
**மற்றும் சிறு துறைமுகங்கள் துறை**
**அமைச்சர்**